MILCO®

දේශයේ අභිමානය

மில்கோ (தனி) நிறுவனம்

இல. 45, நாவல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05.




# வருடாந்த அறிக்கை

# 2015

## ஜனவரி - டிசம்பர்

## எமது தொலைநோக்கு

''இலங்கையில் ''தரத்தில் சிறந்த'' போஷாக்கு உணவு மற்றும் குடிபான நிறுவனமாக ''மில்கோ'' விளங்குதல்''

## எமது செயற்பணி

உள்நாட்டுப் பாற்பண்ணையாளர்களை சக்திமிக்கவர்களாக்கி, பால் உற்பத்தியில் இலக்குப்படுத்தப்பட்ட வளர்ச்சியைச் சாதிப்பதில் தொழிற்பாடு சார்புடைய பங்காளராக விளங்குதல். கட்டுப்படியான விலைகளில் எமது பெறுமதிமிக்க பாவனையாளர்களுக்கு வழங்குவதற்காக போஷாக்கு நிறைந்த குடிபான பதப்படுத்தலில் தொடர்ச்சியான மேம்படுத்தல் முன்னெடுப்புக்களுடன் ஆதரவளிக்கப்பட்ட நவீன தொழில்நுட்பத்தை பிரயோகித்தல்



# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நிறுவனம்சார் தகவல்கள் | 1 |
| தலைவரின் செய்தி | 2 - 3 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 4 - 6 |
| தானம்சார் நிர்வாகம் | 7 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 8 - 9 |
| வருமானக் கூற்று | 10 |
| ஐந்தொகை | 11 |
| உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று | 12 |
| காசுப் பாய்வுக் கூற்று | 13 |
| நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் | 14 - 44 |
| விசேட நிதிசார் நிகழ்வுகள் | 45 - 46 |





*DSSPI - Tel: 2847042 / 2849600 Fax: 2851348*

| | |
|---|---|
| கம்பெனியின் பெயர் | - மில்கோ (பிரைவேற் ) கம்பெனி |
| சட்டபூர்வ அந்தஸ்து | - 1982 கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புடைய தனியார் கம்பெனியாகும். |
| பதிவுசெய்த அலுவலகம் | - இலக்கம் 45, நாவல வீதி, நாரஹேன்பிற்ற, கொழும்பு 05.<br>- தொலைபேசி: 0112586174, 0114500541<br>- தொலை நகல்: 0112368082/ 0112577540/0114500555<br>- வெப் தளம் : www.milco.lk<br>- மின்னஞ்சல் : info@milco.lk |
| தொழிற்சாலைகள் | - கொழும்பு பால் தொழிற்சாலை<br>- அம்பேவெல விசிறல் உலர் பால் தொழிற்சாலை<br>- திகன பால் தொழிற்சாலை<br>- பொலன்னறுவை கட்டிப்பால் தொழிற்சாலை |
| கூட்டிணைத்த திகதி | **- 1996 மே 09** |
| மீள் பதிவு செய்த திகதி | **- 2008 மே 19** |
| கம்பெனியின் பதிவிலக்கம் | - N (PVS) 17159 (பழைய)<br>- PV 2942 (புதிய) |
| கம்பெனியின் செயலாளர்கள் | - பைனேன்ஷல் சேர்விசஸ் அன்ட் கொமர்ஷல் ஏஜன்சீஸ் (பிரை) கம்பெனி<br>இலக்கம் **28,** றோஸ்மீட் பிளேஸ், கொழும்பு 7. |

| பணிப்பாளர்கள் | | |
|---|---|---|
| | - திரு. கே.பீ.பீ.எச். மிஹிரிபென்ன | - தலைவர் |
| | - திரு. பாலித சமரக்கோன் | - பிரதித் தலைவர் |
| | - திரு. ஏ.ஏ. ரீ. எஸ். அமரசிங்க | - செயற்படு பணிப்பாளர் |
| | - திருமதி பியங்கா என் கமகே | - பணிப்பாளர் |
| | - திரு. எம். பீ. சரத் அபேசிங்க | - பணிப்பாளர் |
| | - திரு. ஜே. ஏ. எஸ். ஜயகொடி | - பணிப்பாளர் |
| | - திரு. ஏ.எம். ஆர்.பீ. அழகக்கோன் | - பணிப்பாளர் |
| | - திரு. பீ. டீ. மஹிலால் சந்திம | - பணிப்பாளர் |
| | - திரு. எம்.எச்.எம். பசால் | - பணிப்பாளர் |

| | |
|---|---|
| கணக்காய்வாளர்கள் | - உள்ளக<br>ஏர்ன்ஸ்ற் அன்ட் யங் அட்வைசறி சேர்விசஸ் (பிரை) கம்பெனி<br>**201,** த சேரம் பிளேஸ், கொழும்பு 10.<br><br>- வெளிவாரி<br>பீடீஓ பார்ட்னர்ஸ்,<br>இலக்கம் **65/2,** சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த,<br>கொழும்பு 02.<br><br>- அரசாங்கம் : கணக்காய்வு<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதி |
| வங்கியாளர்கள் | - மக்கள் வங்கி<br>- இலங்கை வங்கி |

இலங்கை மக்களின் அனைத்து வயதுப்பிரிவுகள் மத்தியிலும் நிலவிய போசாக்கு இடைவெளியை ஒழித்துக்கட்டுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி தேசத்திற்கு பசும்பால் வழங்கும் இலங்கையின் நோக்கிற்கு பலம் சேர்க்கையில் அதற்கான முதன்மைச் செயற்பொறுப்பினை இடையறாது ஈடேற்றக் கிடைத்ததையிட்டு நாங்கள் உண்மையிலேயே பெருமை அடைகிறோம். அதற்கிணங்க பாலில் தன்னிறைவு அடைவதற்கான தேசிய இலக்கினை கவனத்திற் கொள்கையில் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்கினை ஈடேற்றுதல் தொடர்பில் மில்கோ தனது பங்களிப்பினை நல்கியுள்ளது மாத்திரமன்றி விரிவான தொழில்வாய்ப்பு ஊடாக நிலைபெறுதகு பொருளாதார அபிவிருத்திக்காகவும் பங்களிப்பு செய்துள்ளது. நோக்கங்களை ஈடேற்றிய வெற்றிகரமான வருடமொன்றை நிறைவுசெய்து 2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மில்கோ கம்பெனியின் ஆண்டறிக்கையையும் எனது செய்தியையும் எமது தரப்பினர்களுக்கு இத்தகைய பின்னணியிலேயே சமர்ப்பிக்கின்றேன்.

**தொழிற்பாட்டு சுற்றுச்சூழல்**

பாலில் தன்னிறைவடைகின்ற தேசிய இலக்குடன் அணிதிரண்டு கைத்தொழில் இடையறாத முன்னேற்றத்தை அடைந்து வருகின்றது. பசும்பால் சேகரித்தல் 61.4 மில்லியன் லீற்றரில் இருந்து கிட்டத்தட்ட 64.5 மில்லியன் லீற்றர்வரை அதிகரித்துள்ளதோடு அது முந்திய வருடத்துடன் சார்புரீதியாக 3.1 மில்லியன் லீற்றர் கணிசமான அதிகரிப்பாகவும் 5%விருத்தியாகவும் அமைகின்றது. கடந்த வருடத்தில் ஒரு லீற்றருக்கான சராசரி விலையாக அமைந்த ரூ. 52.42 இற்கு சார்புரீதியாக இவ்வருடத்தில் ஒரு லீற்றருக்கு ரூ.63.96 சராசரி விலையினை செலுத்த நேரிட்டது. பசும்பால் கொள்வனவு விலையின் அதிகரிப்பு காரணமாக எமது செலவுகள் 908 மில்லியன் ரூபாவினால் அதிகரித்ததோடு அது 28% அதிகரிப்பாகவும் அமைகின்றது. அதற்கிணங்க இவ்வாண்டின் பசும்பால் கிரயம் ரூ. 4,130,855,955 ஆக அமைந்ததோடு அது முந்திய வருடத்தின் பெறுமதியான ரூ. 3,222,805,630 ஐப் பார்க்கிலும் மிகவும் உயர்வானது.

**அளவுசார்ரீதியான செயலாற்றுகை**

தொழிற்பாட்டு சுற்றுச்சூழலில் தொடர்ச்சியாக நிலவிய போட்டித்தன்மை காரணமாக மில்கோ கம்பெனி பல்வேறு சவால்களை எதிர்நோக்கியதோடு மேற்படி சவால்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் தனது தொழிற்பாடுகளின் விருத்திப் பயணப்பாதையினை கம்பெனி தொடர்ச்சியாக பேணிவருவதை உறுதிப்படுத்தி பல புதிய செயற்பாடுகள் தொடங்கப்பட்டன.

மொத்த விற்பனை ரூ.7,584,727,777 இல் இருந்து ரூ.7,391,623,123 வரை 5% ஆல்அதிகரித்தது.எவ்வாறாயினும் பசும்பாலின் விலை 2014 நவெம்பர் மாதத்தில் முதலில் ரூ. 50 தொடக்கம் ரூ. 60 வரையும் பின்னர் மீண்டும் 2015 யூலை மாதத்தில் ரூ. 60 இல் இருந்து ரூ. 70 வரையும் அதிகரித்தபோதிலும் விற்பனை விலையை அதிகரிக்க இயலாமல் போனமையால் முந்திய வருடத்தைப் பார்க்கிலும் மொத்த இலாபத்தில் வீழ்ச்சி சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கிணங்க முதலாவது விலையேற்றத்தின்போது கம்பெனியால் ரூ. 411 மில்லியன் மேலதிக கிரயத்தை ஏற்க நேரிட்டதோடு இதில் ரூ. 35 மில்லியன் மாத்திரம் அரசாங்கத்தின் ஏற்பாடுகளால் ஈடுசெய்யப்பட்டதோடு இரண்டாந்தடவை விலையேற்றத்தின்போது ரூ. 168 மில்லியன் மேலதிக செலவினை ஏற்க நேரிட்டதோடு அதில் ரூ. 40 மில்லியன் மாத்திரம் அரசாங்கத்தின் ஏற்பாடாக வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும் நிலவிய வெளிவாரி நிலைமைகளை எதிர்பார்த்து உற்படுத்தப்பட்ட செலவினத்தின் கணிசமான பகுதி அரசாங்கத்தின் கொடையினால் உள்ளடக்கப்படாமையின் சவாலை முகாமைசெய்து மில்கோ கம்பெனி தனது உற்பத்தி, கட்டுப்பாடு, முறைமைகள்மற்றும் செயற்பாடுகளில் நுணுக்கமான முகாமைத்துவ உபாயமுறைகளை பிரயோகித்ததோடு அதன் மூலமாக இவ்வருடத்தில் ரூ. 16 மில்லியன் நட்டத்தை மாத்திரம் பதிவுசெய்து சாதகமான நிகர ஈட்டல் நிலைமையை பேணிவர கம்பெனிக்கு இயலுமாயிற்று.

எனினும் ஒரு கிலோ பால்மாவின் விற்பனை விலை 100 ரூபாவாலும் ஒரு கோப்பை யோகற் விலை 3 ரூபாவாலும் குறைக்கப்பட்டவேளையில் கம்பெனிக்கு பொது திறைசேரியிடமிருந்து 100 மில்லியன் ரூபா மானியமொன்று கிடைத்தது. பின்னர் அரசாங்கத்தால் 400 கிறாம் பால்மா பக்கெற்றின் விலை ரூ. 325 வரை அதிகரிக்கப்பட்டதென்பதையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். தேசத்தின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்காக தன்னிடம் கையளிக்கப்பட்டுள்ள தேசிய பொறுப்பினை எவ்வேளையிலும் உணர்ந்துள்ள மில்கோ கம்பெனி வாழ்க்கைச் செலவினை நிலையானதாக பேணிவருவதற்காக அரசாங்கம் விடுத்த வேண்டுகோளின்பேரில் பாவனையாளர் அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் எமது விற்பனை விலையை ரூ. 5 ஆல் குறைக்க தீர்மானித்ததோடு அதற்கிணங்க 2015 ஒக்டோபர் 01 ஆந் திகதி தொடக்கம் 400 கிறாம் பால்மா பக்கெற் ஒன்று ரூ. 320 இற்கு விற்பனை செய்யப்பட்டது. பின்னர் 2016 இற்கான வரவு செலவு மூலமாக 400 கிறாம் பால்மா பக்கெற் ஒன்றுக்கான உச்சமட்ட சில்லறை விலை ரூ. 295 ஆக அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டதோடு அதன்பொருட்டு ஏற்க நேரிட்ட ரூ. 25 பணத்தொகை அரசாங்கத்தின் கொடையாக மீள்அறவீடு செய்யப்பட்டது. எனினும் அங்கீகரித்த கொடை 400 கிறாம் பெக்கெற் ஒன்றுக்கு ரூ. 30 ஆக அமைந்ததது.

**பலங்களை விருத்திசெய்து**

மில்கோ கம்பெனி இன்றளவில் இலங்கையில் பால் கைத்தொழிலில் 60 வருடங்களுக்கு மேலாக ஈடுபட்டு வருகின்றது. இந்த ஆறு தசாப்தத்தில் கம்பெனி தரமுயர்ந்த உற்பத்திகளுக்காக பிரபல்யம்வாய்ந்த வர்த்தகப் பெயரைப்போன்றே தேசத்தின் ஆரோக்கியம் மற்றும் நல்வழியுரிமையை உறுதிப்படுத்துகின்ற சமூகப்பொறுப்புடன் அணிதிரண்ட மூலாரம்பமாக சந்தையில் தன்னை உறுதிசெய்துள்ளது. தேசிய பால் உற்பத்தியை நெறிப்படுத்துகின்ற

கம்பெனியொன்றாக நிலைபெற்றுள்ள மில்கோ நிறுவனம் ஒருபோதுமே அந்த நோக்கத்திலிருந்து விலகிநிற்காமல் இன்றளவில் தனது அதியுயர் பலமாக அமைகின்ற வாடிக்கையாளர் நம்பிக்கையின் அசையாத அத்திவாரத்தைக் கட்டியெழுப்பி உள்ளமை மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

எமது தரப்பினருடன் செயலாற்றுகின்ற அடிப்படையாக அமைவது நம்பிக்கையும் அர்ப்பணிப்பும் ஆகும். எமது ஒவ்வொரு தரப்பினருடனும் நாங்கள் கட்டியெழுப்பியுள்ள மற்றும் பலம்பொருந்தியதாக பேணிவருகின்ற உறவுகளை நீண்டகாலம் நிலைத்திருக்கவல்லதாக தாபித்திருப்பது இருதரப்பினருக்கும் வெற்றி உரித்தாகின்ற விதத்திலாகும். உதாரணமாக எமது கம்பெனியின் முதுகெழும்பான எமது விவசாயிகள் மில்கோ கம்பெனி முழுமையாகவே அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனமென்பதை நன்கு அறிந்து பக்கச்சார்பினை தெளிவாக வெளிப்படுத்தி உள்ளமையால் இந்த உரித்துவத்துடன் கிடைக்கின்ற அரசாங்கத்தின் உத்தரவாதத்திற்கு பெரிதும் நன்றிக்கடன் பட்டவர்களாவர். தமது நன்மையை சதாகாலமும் மனதில் நிலைநிறுத்தி அரசாங்கம் தீர்மானங்களை மேற்கொள்கின்றதென்பதை விவசாயிகள் உணர்ந்துள்ளமையால் அந்த உரித்துவம் பற்றிய தெளிவான தன்மை நிலவுவதோடு அது இயல்பாகவே இந்த உறவினை பலப்படுத்தி உள்ளது.

எமது தொழில்முயற்சி நிர்மாணிக்கப்பட்டுள்ள பலம்பொருந்திய அத்திவாரம் எமது அணியாகும். நாங்கள் நம்பிக்கை வைத்துள்ள சமூகப் பொறுப்புக்கான உரித்துவத்தை அவர்கள் வகிக்கின்றமை தொடர்பில் நாங்கள் பெருமிதம் அடைவதோடு உறவுகளை பலப்படுத்தி தரம் பற்றி தொடர்ச்சியாக கவனஞ்செலுத்தி புத்தம்புதிய உற்பத்திகளுக்கான வழிசமைப்பவர்களாக நாங்கள் தொடர்ந்தும் செயலாற்றி வருகிறோம். அவர்களின் ஆற்றல்கள் கம்பெனிக்கு மாத்திரமன்றி ஒட்டுமொத்த தேசத்தின் நோக்கிற்கு அவர்களால் வழங்கப்படக்கூடிய பங்களிப்பினை உச்ச மட்டத்திற்கு கொண்டுவரும் பொருட்டு இலக்குகள் அமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி ஊடாக நாங்கள் அவர்களின் அறிவாற்றல் விரிவாக்குதலை இடையறாமல் மேற்கொண்டு வருகிறோம்.

எமக்கு உரித்தான மற்றுமொரு பலமாக அமைவது பால் பெற்றுக் கொள்வது தொடக்கம் நுகர்வு வரை அதன் நவீனத்துவத்தையும் தரத்தையும் உறுதிசெய்து பால் உற்பத்தி செய்யப்படுகின்ற பிரதேசங்கள் அனைத்திலும் செயலாற்றும் ஆற்றலை எமக்கு அளிக்கின்ற பால் சேகரித்தல் வலையமைப்பு ஆகும். எமது உற்பத்திகளின் உயர்ந்த தரத்திற்கு உத்தரவாதமளிக்கின்ற உரிய வகையில் பால் சேகரிக்கும் செயற்பாடு மற்றும் தொடர்நடவடிக்கை பற்றி நாங்கள் பெரிதும் புரிந்துணர்வு கொண்டுள்ளமையால் தரம் பற்றிக் கவனஞ் செலுத்துகையில் போட்டித்தன்மையில் மிகுந்த முன்னணியில் திகழ அது மில்கோ நிறுவனத்திற்கு ஆற்றலை பெற்றுத்தந்துள்ளது.

அம்பேவெல, திகன மற்றும் பொலன்னறுவை தொழிற்சாலைகளை விருத்திசெய்தல் பற்றி கடந்த ஆண்டறிக்கையில் நாங்கள் குறிப்பிட்டிருந்ததோடு அதில் பொலன்னறுவை தொழிற்சாலையை விருத்திசெய்தல் இவ்வாண்டின் பின்னரைப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்டது. இதன் மூலமாக உற்பத்திக்கொள்திறன் மாத்திரமன்றி உற்பத்தித்தரமும் கணிசமான அளவில் மேம்படுத்தப்பட்டது. திகன மற்றும் அம்பேவெல தொழிற்சாலைகளை விருத்திசெய்யும் பணிகள் இன்னமும் நடைபெற்று வருவதோடு 2017 ஆம் ஆண்டில் நிறைவுசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**எதிர்கால பயணப்பாதை**

மில்கோ நிறுவனத்திற்கு ஒரேயொரு நோக்கு மாத்திரமே உண்டு. அதாவது 2010 இல் பாலில் தன்னிறைவு காணும் தேசிய இலக்காக அமைகின்ற இலங்கையர்களுக்கு பசும்பால் வழங்கும் வேலைத்திட்டத்திற்கு தலைமை வகிப்பதாகும். அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு தொழில்முயற்சி என்றவகையில் இந்த இலக்கினை அடைவதில் சந்தேகமற அரசாங்கத்தின் இயக்குவலுவாக அமைவது நாங்களே என்பதோடு குறுங்கால மற்றும் நெடுங்கால ஆகிய இருவகையான இலக்குகளுடன் நாங்கள் ஒரே வரிசையில் இருக்கத்தக்கதாக மூலோபாய ரீதியில் இடஅமைவு செய்துள்ளோம். கைத்தொழிலில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களை தாபிப்பதற்காக புதிதாக ஊக்குவிப்புகள் உள்ளமையால் குறுங்கால ரீதியில் எடுத்துக்கொண்டால் தொழிற்பாட்டு சுற்றுச்சூழல் மேலும் போட்டித்தன்மைமிக்கதாக அமையுமென நாங்கள் நம்புகிறோம். நிகழ்காலத்தில் மில்கோ கொண்டுள்ள போட்டித்தன்மைமிக்க அநுகூலமான விலை மற்றும் தரத்தன் மீது இது அழுத்தத்தை உருவாக்கும்.

நாங்கள் முன்நோக்கி நகரும்போது எம்மை முன்னிலையில் இருக்க ஆற்றலை வழங்குகின்ற உபாயமுறைகளை பிரயோகித்துள்ளமையை நாங்கள் நன்கு அறிவோம். மில்கோ என்பது வெறுமனே இலாபத்தை நோக்கமாக கொண்டதல்ல என்பதோடு தீவிலுள்ள பால் விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துகின்ற அதேவேளையில் ஆரோக்கியமிக்க தேசமொன்றைக் கட்டியெழுப்பும் மிகவும் பரந்த நோக்கத்திற்கான முயற்சியின் ஒரு பகுதியாக விளங்குவதாகும். எமது சேகரித்தல் வலையமைப்பினை விரிவாக்குகின்ற அதேவேளையில் நாம் பெற்றுக்கொள்கின்ற பாலுக்கான உயர்ந்த விலையினை செலுத்துவதன் மூலமாக மில்கோ கம்பெனி தனது சமூகப் புலனுணர்வினை மென்மேலும் பலப்படுத்தி உள்ளதோடு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கால்நடை வளர்ப்புக்கான முதலீடுகளை மேற்கொள்வதன் ஊடாக உற்பத்திக் கொள்திறன் அதிகரிக்கும், தரம் உயர்வடையும், உற்பத்தி விரிவடையும்.

இவை எல்லாவற்றையும்விட ஆரோக்கியமிக்க ஒரு தேசத்திற்கான பயணப்பாதை திறக்கப்படுவதோடு நிலைபெறுதகு பொருளாதார அபிவிருத்தியை பலம்பொருந்தியதாக கட்டியெழுப்புவதற்கான அத்திவாரமாக அது அமையும்.

**நன்றி**

எமது திடசங்கற்பம் நிறைந்த இலக்கினை முன்னணியில் திகழவைக்க எனக்கு உதவிபுரிந்து அளிக்கின்ற இடையறாத ஒத்துழைப்புக்காக எனது பணிப்பாளர் சபைக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி இலக்கினை அடைவதில் அது மாபெரும் பக்கபலமாக அமைந்தது.

எங்களின் பயணத்தின்போது அடிக்கடி எமக்கு ஊக்கமளிக்கின்ற கௌரவ அமைச்சருக்கும் அமைச்சு உத்தியோகத்தர்களுக்கும் மில்கோ பணிப்பாளர்சபையின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளவும் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

**கீர்த்தி மிஹிரிபென்ன**
**தலைவர்**
**மில்கோ (பிரை) கம்பெனி**

**2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதிக்கான மில்கோ (பிரை) கம்பெனியின் பணிப்பாளர்களின் அறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையையும் நாங்கள் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறோம்.**

**பிரதான பணி**

பசும்பாலை சேகரித்தல் மற்றும் பால் உற்பத்திகளின் பதப்படுத்தல், பொதியிடல், விநியோகித்தல் மற்றும் சந்தைப்படுத்துதலே ஆண்டுக்குள் கம்பெனியின் பிரதான செயற்பாடாக அமைந்தது.

**ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி**

ஆண்டுக்குள் கம்பெனியின் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சேர்த்தல்கள் 540.2 மில்லியன் ரூபாவாக அமைந்ததோடு தேய்மானக் கட்டணங்கள் சுட்டிக்காட்டப்பட்டவாறு அமையும்.

**பணிப்பாளர் சபை**

2015.02.02 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக கிராமிய பொருளாதார அலுவல்கள் பற்றிய புதிய அமைச்சு தாபிக்கப்பட்ட பின்னர் பொது திறைசேரியின் செயலாளரால் கீழே காட்டப்பட்டுள்ள பணிப்பாளர்சபை நியமிக்கப்பட்டது.

| | |
|---|---|
| திரு. சுனிமல் சேனாரத்ன | - தலைவர் |
| திரு. கே.பீ.பீ.எச். மிஹிரிபென்ன | - பிரதித் தலைவர் |
| திரு. ரியுடர் எஸ். அமரசிங்க | - செயற்படு பணிப்பாளர் |
| திருமதி பியங்கா கமகே | - பணிப்பாளர் ( திறைசேரியின் பிரதிநிதி) |
| திரு. ஜே.ஏ.எஸ். ஜயகொடி | - பணிப்பாளர் |
| திரு. டீ.பீ. விஜேசிங்க | - பணிப்பாளர் |
| திரு. டபிள்யு.ஏ.சீ. பெரேரா | - பணிப்பாளர் |
| திரு. எம்.பீ.எஸ். அபேரத்ன | - பணிப்பாளர் |
| திரு. ஆர்.எம்.பீ. பத்திரத்ன | - பணிப்பாளர் |

கீழே பெயர் குறிப்பிடப்பட்ட பணிப்பாளர்கள் இங்கு காட்டப்பட்டுள்ள திகதிகளிலிருந்து அமுலுக்கு வரத்தக்கதாக இராஜிநாமா செய்தனர்/ நியமிக்கப்பட்டனர்.

திரு. சுனிமல் சேனாரத்ன 2015.11.18 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக இராஜிநாமா செய்தார்.

திரு. கே.பீ.பீ.எச். மிஹிரிபென்ன 2015.11.18 ஆந் திகதி தொடக்கம் தலைவராக நியமிக்கப்பட்டார்.

திரு. டீ.பீ. விஜேசிங்க 2015.11.23 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக இராஜிநாமா செய்தார்.

திரு. டபிள்யு.ஏ.சீ. பெரேரா 2015.11.18 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக இராஜிநாமா செய்தார்.

திரு. ஆர்.எம்.பீ. பத்திரத்ன **2015.06.08** ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக இராஜிநாமா செய்தார்.

கலாநிதி திரு. சீ.என்.எஸ். கமகே 2015.06.08 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டதோடு 2015.10.23 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக இராஜிநாமா செய்தார்.

திரு. பீ.பி.ஏ. சமரக்கோன் 2015.11.18 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.

திரு. ஏ.எம்.ஆர்.பீ. அழகக்கோன் 2015.11.18 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.

திரு. பீ.டீ.எம். சந்திம 2015.11.18 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.

திரு. எம்.எச்.எம். பசால் 2015.11.18 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக நியமிக்கப்பட்டார்.

**பங்குகள் பற்றிய தகவல்கள்**

மீளாய்வாண்டு பூராவிலும் கம்பெனியின் வெளிப்படுத்திய மூலதனத்தின் அளவு மற்றும் பெறுமானம் 319.4 மில்லியன் ரூபாவாக அமைந்தது.

**ஒதுக்கம்**

ரூ. **1,230,935,630/=**ஆக அமைந்த முன்கொண்டு வந்த திரண்ட இலாபம் கணக்குகளில் முதலாவது பக்கத்தில் காட்டப்பட்டுள்ள வரிகளுக்குப் பின்னர் நடப்பு வருடத்தின் இலாபமாக அமைந்த ரூ. **26,856,301/=** இற்கு சீராக்கப்பட்டது.

ஒதுக்கங்களில் ஆண்டின் இறுதியில் ரூபா **25,000,000/-** மூலதன ஒதுக்கமும் ரூபா **1,689,978/-** ஐ ஆக அமைந்த கடன்தீர்ப்பு நிதியமும் அடங்கும்.

**ஒப்ந்தங்களிலான பணிப்பாளர்களின் ஈடுபாடுகள்**

கம்பெனியின் பணிப்பாளர்கள் கம்பெனியின் எந்தவோர் ஒப்பந்தத்திலும் நேரடியாகவோ மறைமுகமாவோ தொடர்புபடவில்லை.

**தாபனம்சார் நிர்வாகம்**

பணிப்பாளர்சபை சாதகமான தாபன நிருவாகத்தை உறுதிப்படுத்துகின்றது. கம்பெனியின் நோக்கங்களைப் போன்றே பங்குடைமையாளர்களின் நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களுடன் செயலாற்றுகை அமைந்தொழுகுவதை உறுதிப்படுத்தவேண்டியது பணிப்பாளர்சபையின் பொறுப்பாகும்.

### வரிவிதிப்பு

வட்டி வருமானத்தில் மற்றும் பிற்போடப்பட்ட வரிகளிலிருந்து தோன்றுகின்ற வருமான வரிப் பொறுப்பு ரூ. **20,467,898/=** ஆகும். 2006 இன் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டத்தின் தொழிற்பாட்டு செயற்பாடுகளின்பேரில் இலாபம் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

### நியதிச்சட்டமுறையான செலுத்துதல்கள்

அரசாங்கத்திற்கு, ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தவேண்டியுள்ள அனைத்துவிதமான நியதிச்சட்டமுறையான செலுத்துதல்களும் உரிய நேரத்தில் சரியாக செலுத்தப்பட்டுள்ளதாக பணிப்பாளர்கள் தமது உச்ச அளவிலான அறிவு மற்றும் நம்பிக்கைக்கிணங்க திருப்தியடைகிறார்கள்.

### அமைந்தொழுகுந்தன்மை

இலங்கை அல்லது வேறு தேசமொன்றுடன் ஏற்புடைய சட்டங்களை அல்லது பிரமாணங்களை மீறத்தக்கவகையிலான செயற்பாடுகளில் கம்பெனி ஈடுபடுவதில்லை.

### இடையறா வழியுரிமை

எதிர்பார்த்துள்ள வருங்காலத்தில் தனது தொழிற்பாடுகளை இடையறாமல் பேணிவர போதியளவிலான வளங்களை கம்பெனி கொண்டுள்ளதாக பணிப்பாளர்சபை திருப்தியடைகின்றது. அதற்கிணங்க கம்பெனியின் கணக்குகளை தயாரிக்கையில் இடையறாத வழியுரிமை எண்ணக்கருவினை பிரதியீடுசெய்தலை நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறோம்.

### கணக்காய்வாளர்களை நியமித்தல்

**2015.12.31** ஆந் திகதியில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதிக்காக கம்பெனியின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளர்களாக பட்டயக் கணக்காளர்களான M/S BDO Partners நிறுவனம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் பெயர் குறிக்கப்பட்ட பின்னர் பொதுத்திறைசேரியின் பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டது. பணிப்பாளர்களின் அறிவுக்கெட்டியவரையில் கணக்காய்வாளர்களுக்கு கம்பெனியுடனோ அல்லது அதனால் நிர்வகிக்கப்படுகின்ற கம்பெனிகளுடனோ அவர்களின் சுதந்திரத்தில் தாக்கமேற்படுத்தக்கூடிய எவ்விதமான உறவும் கிடையாது.

### பணிப்பாளர்களின் சார்பாகவும் அவர்களுக்காகவும்

...................................
கம்பெனியின் செயலாளர்
**பினேன்ஷல் சேர்விசஸ் அன்ட் கொமர்ஷல் ஏஜன்சீஸ் (பிரை) கம்பெனி**
**( Sec/555/91), இலக்கம் 28, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 07.**

மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபையினால் மாதத்திற்கு ஒருதடவை என்ற அடிப்படையில் பணிப்பளர்சபைக் கூட்டம் நடத்தப்பட்டது. நிதிக்கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துகையிலும் பேணிவருகையிலும் கூட்டாண்மைத்திட்டமும் வருடாந்த வரவுசெலவுத் திட்டமும் பிரதானமான சாதனங்களாக அமைந்ததோடு நிதியாண்டின் தொடக்கத்தில் முகாமையாளர்கள் அனைவரையும் வினவி அவை தயாரிக்கப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

மாதாந்த செயலாற்றுகை அறிக்கை முந்திய மாத அறிக்கையுடன் ஒப்புநோக்கப்படுவதோடு அடுத்தடுத்து வருகின்ற மாதாந்த கூட்டங்களின்போது வரவுசெலவுகள் கிரமமாக சமர்ப்பிக்கப்பட்டன.இந்த அறிக்கை இலக்குகள் சகிதம் நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு செயலாற்றுகை பற்றிய நடப்பு அறிக்கைகளை வழங்குவதோடு கம்பெனியின் இலாபம் அல்லது நட்டம் சம்பந்தமாக பயனுறுதிமிக்க முகாமைத்துவ தீர்மானங்களை மேற்கொள்ள பணிப்பாளர்சபைக்கு இயலுமையை வழங்குகின்றது.

**கணக்காய்வுக் குழு**

திறைசேரியைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பணிப்பாளர் கணக்காய்வுக்குழுவுக்கு தலைமை வகித்தல் வேண்டுமென்பதோடு குழு மேலும் நிறைவேற்றுத்துறையல்லாத இரண்டு பணிப்பாளர்களுடன் இயங்கியதோடு அது பணிப்பாளர்சபையின் துணைக்குழுவாக செயலாற்றி வருவதோடு மிகவும் உயர்வான சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக வெளிவாரி நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ள உள்ளக கணக்காய்வு மூலமாக அதற்கு சேவை வழங்கப்படுகின்றது.

எம்/எஸ் ஏர்ன்ஸ்ற் அன்ட் யங் அட்வைசறி சேர்விசஸ் (பிரை) கம்பெனி ஆண்டில் உள்ளக கணக்காய்வாளராக செயலாற்றியது.தலைமையகத்திற்கு மேலதிகமாக கொழும்பு, அம்பேவெல மற்றும் திகன தொழிற்சாலைகளில் வதிவிட உத்தியோகத்தர்களையும் கொண்டதாக தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற கிளை அலுவலகங்கள் அவர்களிடம் உள்ளன.

உள்ளக கணக்காய்வாளர்களால் தயாரிக்கப்படுகின்ற கணக்காய்வுத்திட்டமொன்று வருடத்தின் தொடக்கத்தில் கணக்காய்வுக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதோடு இந்த திட்டத்தின் பிரகாரம் ஆண்டு பூராவிலும் உள்ளக கணக்காய்வு விவசாரணைகளும் பரிசோதிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கணக்காய்வில் உள்ளடக்கப்படுகின்ற விபரமான அறிக்கைகள் முதலில் கருத்துக்கள் மற்றும் பிரதிபலிப்புகளுக்காக சம்பந்தப்பட்ட முகாமையாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாடப்படும்.இந்த கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு பொழிப்பு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக் குழுவின் மீளாய்வு மற்றும் தொடர்நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்படும். கணக்காய்வுக்குழுக் கூட்டம் மாதமொரு தடவை நடைபெறும்.

**நிறுவனம்சார் முகாமைத்துவம்**

தனது பங்குரிமையாளர்களுக்கு நியாயமான திட்பநுட்பத்தன்மை கொண்டதாக கம்பெனியின் நிதிநிலைமை பிரதிநித்துவப்படுத்தப் படக்கூடியவகையில் முறையான கணக்காய்வு அறிக்கைகளை கம்பெனி பேணிவருகின்றதென்பதை உறுதிசெய்ய பணிப்பாளர்சபை ஆவனசெய்கின்றது.அத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பெனிகள் சட்டத்தின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகத்தக்கதாக நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுகின்றன என்பதையும் சமர்ப்பிக்கப்படுகின்றன என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } FLS/C/MILCO/15/01    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 26 May 2017

To the shareholder of the
MILCO (Private) Limited

**Report of the Auditor General on the Financial Statements of the MILCO (PRIVATE) Limited for the year ended 31 December 2015**

மில்கோ (பிரை) கம்பெனியின் 2015 திசெம்பர் 31 இல் நிதிநிலைமை பற்றிய அறிக்கை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் செயலாற்றுகை அறிக்கை,உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்றும் காசுப்பாய்வுக் கூற்றும் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய தெளிவுபடுத்தல் தகவல்களின் பொழிப்பினையும் உள்ளடக்கிய 2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வினை மேற்கொள்வதில் பகிரங்கமாக தொழில்முயற்சியில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காளர் கம்பெனியொன்று எனக்கு ஒத்துழைப்பு நல்கியது.

**நிதிக்கூற்றுகள் பற்றிய பணிப்பாளர்சபையின் பொறுப்பு**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக இந்த நிதிக்கூற்றுகளை தயாரித்தல் மற்றும் நியாயமானவகையில் சமர்ப்பிக்கின்ற பொறுப்பும்மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் அற்றனவாக நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் ஆற்றலை ஏற்படுத்த அவசியமானவையென பணிப்பாளர்சபை நிர்ணயிக்கின்ற உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடுதலும் பணிப்பாளர்சபையின் பொறுப்பாகும்.

**கணக்காய்வாளரின் பொறுப்பு**

கணக்காய்வினை அடிப்படையாகக்கொண்டு இந்த நிதிக்கூற்றுகள் சம்பந்தமான எமது அபிப்பிராயத்தை தெரிவிப்பதே எமது பொறுப்பாக அமைகின்றது.ஒழுக்கநெறி ரீதியான அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுவதும் நிதிக்கூற்றுகள் பொருண்மையில் பிறழ்கூற்றுகள் அற்றனவாக உள்ளனவா என்பது பற்றிய நியாயமான உத்தரவாதத்தை பெற்றுக்கொள்ளும் பொருட்டு கணக்காய்வினைத் திட்டமிட வேண்டியதும் இந்த தரநியமங்கள் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்ட பெறுமானங்கள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கு உதவியாக அமைகின்ற கணக்காய்வுச்சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகளை அமுலாக்குதல் கணக்காய்வில் அடங்குகின்றது. தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள்,மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடியபொருண்மைரீதியான பிறழ்கூற்றுகளின் இடர்களை மதிப்பீடுசெய்தல் கணக்காய்வாளரின் தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டதாக அமைகின்றன. இந்த இடர்களை மதிப்பீடுசெய்கையில் அப்போதைய நிலைமைகளில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும்பொருட்டு நிதிக்கூற்றுகள் தொடர்பிலான நிறுவனத்தின் தயார்நிலை மற்றும் நியாயமானவகையில் சமர்ப்பித்தலுடன் ஏற்புடைய உள்ளக கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கவனத்தில் கொண்டபோதிலும் அவ்வாறு செய்வது நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாடு பற்றிய பயனுறுதி தொடர்பான அபிப்பிராயமொன்றை வெளியிடுவதற்கான கருமத்திற்காக அல்ல. பிரயோகித்த கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மையை மதிப்பீடு செய்தலைப்போன்றே நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமரப்பித்தலை மதிப்பீடுசெய்தலும் கணக்காய்வில் அடங்குகின்றது.

நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்க போதுமானதும் பொருத்தமானதுமென நான் நம்புகிறேன்.

**தகுதிபெற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**அ) முற்றுப்பெறாத மூலதன வேலைகள்**

1) அறிக்கையிடல் திகதிக்கு கணிசமான காலப்பகுதி பூராவிலும் பயன்படுத்தப்பட்டிராத ரூ. 104,177,780/- பெறுமதியான யோகற் கலக்கின்ற பொறித்தொகுதிக்கூடம் இதில் அடங்குகின்றது.அத்தகைய நீண்டகாலமாக பொறித்தொகுதிக்கூடம் பாவனைக்கு எடுக்கப்பட்டிராமை பொறித்தொகுதிக்கூடத்தின் சேதஇழப்பு பற்றிய இ.க.நி. 36 மூலமாக விதிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சேதஇழப்புக்கான பரிசோதித்தல் அவசியமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

எவ்வாறாயினும் அறிக்கையிடல் திகதியளவில் முகாமைத்துவத்தினால் சேதஇழப்புக்காக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை என்பதோடு அதன் பெறுபேறாக அறிக்கையிடல் திகதியளவில் அதன் மதிப்பீடு பற்றி எமக்கு திருப்தியடைய இயலாமல் போயிற்று.

2) கம்பெனியின் மூன்று தொழிற்சாலைகளை நவீனமயமாக்கும்பொருட்டு ரூ. 6,617,560,269/- இற்கு உட்பட்ட கிரயமும் பால் பதப்படுத்தல் பொறித்தொகுதிக்கூடமொன்றை படல்கமவில் நிறுவும்பொருட்டு ரூ. 429,172,328/- இற்கு உட்பட்ட கிரயமும்இதிலடங்கும். கம்பெனியில் மேம்படுத்தப்பட்ட கொள்திறனை நிறைவுசெய்ய எதிர்பார்த்துள்ள பால் வழங்கல் போதுமானதாக அமையாதென நடப்பு முகாமைத்துவ அறிக்கைகள்/கடிதப் பரிமாற்றங்கள் மற்றும் கேட்டறிதலை அடிப்படையாகக்கொண்டு நாங்கள் அவதானித்தோம். மேலே வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு இது மீதிகளின் சேத இழப்பு பற்றிய குறிப்பாலுணர்த்தலாக அமைவதோடு அதனால் சொத்துக்களின் சேதஇழப்பு பற்றி இ.க.நி. 36 மூலமாக விதிக்கப்பட்டுள்ளவாறு சேதஇழப்புக்கான பரிசோதித்தல் அவசியமாகும்.

எவ்வாறாயினும் அறிக்கையிடல் திகதியளவில் முகாமைத்துவத்தினால் சேதஇழப்புக்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதோடு அதன் பெறுபேறாக அறிக்கையிடல் திகதியளவில் அதன் மதிப்பீடு பற்றி எமக்கு திருப்தியடைய இயலாமல் போயிற்று.

**ஆ) கிடைத்த கப்பற்சரக்கு கையிருப்புக்காக நீண்டகாலமாக செலுத்தவேண்டிய பணம்**

23 வது குறிப்பில் விபரிக்கப்பட்டுள்ளவாறு கம்பெனியின் மூன்று தொழிற்சாலைகளை நவீனமயமாக்குவதற்காகரூ. 300, 640, 103/= பெறுமதியான சென்மதியான மீதியுடன் தொடர்புடைய மூன்றாந்தரப்பு உறுதிப்படுத்தல்கள் எமக்கு வழங்கப்படவில்லை.

கம்பெனியின் அறிக்கைகளின் தன்மை காரணமாக அறிக்கையிடல் திகதியில் மேலே கூறப்பட்ட மீதியின் பூரணநிலை மற்றும் திட்பநுட்பத்தன்மை பற்றி எம்மால் திருப்தியடையக்கூடியவகையிலான ஏனைய கணக்காய்வு நடைமுறைகளை நிறைவேற்ற எமக்கு இயலாமல் போயிற்று.

**தகுதிபெற்ற அபிப்பிராயம்**

எமது அபிப்பிராயத்திற்கிணங்க அபிப்பிராயத்திற்கான அடிப்படை பற்றிய பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றிய தாக்கம் நீங்கலாக எமது பரிசோதனைகளில் புலப்படுகின்ற வகையில் இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் மில்கோ (பிரை) கம்பெனியின் நிதிநிலைமை மற்றும் அத்தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்வு பற்றிய உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயத்தை வழங்குகின்றது.

**ஏனைய சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 163(2) பிரிவில் விதிக்கப்பட்டுள்ளவாறு பின்வருவனவற்றைக் கூறுகிறோம்:

அ) கணக்காய்வுக்கான அபிப்பிராயம் மற்றும் கணக்காய்வின் பரப்பெல்லையும் வரையறைகளும் மேலே கூறப்பட்டவாறு அமையும்.

ஆ) எனது அபிப்பிராயத்தின் பிரகாரம்:

- கணக்காய்வுக்காக அவசியமாகின்ற அனைத்துவிதமான தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு எனது புலனாய்வில் புலப்படுகின்ற அளவில் கம்பெனியால் முறையான கணக்கறிக்கைகள் பேணப்பட்டுள்ளன.
- கம்பெனியின் நிதிக்கூற்றுகள் கம்பெனிகள் சட்டத்தின் 151 வது பிரிவின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.

**பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல்**
அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்படும்.

**எச்.எம். காமினீ விஜேசிங்க**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

| | குறிப்பு | 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது ரூ. | 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற 9 மாத கால எல்லைக்கானது ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | 3 | 7,584,727,777 | 5,627,620,660 |
| விற்பனைக் கிரயம் | | (7,011,965,727) | (4,856,647,872) |
| மொத்த இலாபம் | | 572,762,050 | 770,972,788 |
| பிற தொழிற்பாட்டு வருமானம் | 4 | 353,057,479 | 174,764,543 |
| | | 925,819,529 | 945,737,331 |
| நிர்வாகச் செலவுகள் | | (617,282,945) | (472,517,379) |
| விநியோகச் செலவுகள் | | (201,941,435) | (189,137,155) |
| பிற செலவுகள் | 5 | (67,777,030) | (1,348,902) |
| தொழிற்பாடுகளிலிருந்து இலாபம் | | 38,818,119 | 282,733,895 |
| நிதிசார் வருமானம் | 6 | 73,076,212 | 61,925,734 |
| நிதிசார்செலவுகள் | 7 | (108,076,590) | (96,500,495) |
| வரிக்கு முந்திய நிகர இலாபம் /(நட்டம்) | 8 | 3,817,741 | 248,159,134 |
| வருமான வரிச் செலவுகள் | 9 | (20,467,898) | (6,201,217) |
| ஆண்டுக்கான வரிக்குப் பிந்திய நிகர இலாபம்/(நட்டம்) | | (16,650,157) | 241,957,917 |
| **பிற விபரமான வருமானம்** | | | |
| வரி கழித்து குறித்துரைத்த நன்மைத் திட்டங்கள் மீதான ஆயுட்கணிப்பு இலாபம்/(நட்டம்) | | 43,506,458 | (27,031,726) |
| வரி கழித்து பிறமொத்த விபரமான வருமானம் | | 43,506,458 | (27,031,726) |
| மொத்த விபரமான வருமானம் | | 26,856,301 | 214,926,191 |
| பங்கொன்றுக்கான அடிப்படை ஈட்டல்கள் | 10 | (0.52) | 7.57 |

அடைப்புக்குள்ளே இருக்கின்ற எ ண்கள் கழித்தல்களையே காட்டுகின்றன.

பக்கம் 05தொடக்கம் 36 வரை காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுகளின் அத்தியாவசியமான பகுதியாக அமையும்.

கொழும்பு
2017மே 18

| | குறிப்பு | 2015 டிசெம்பர் 31 இல் ரூ. | 2014டிசெம்பர் 31 இல் ரூ. |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | |
| ஆதனம், சாதனம்,பொறித்தொகுதி | 11 | 1,479,986,458 | 1,199,726,830 |
| முற்றுப்பெறாத மூலதன வேலைகள் | 12 | 6,735,781,479 | 5,947,060,383 |
| பருவ முதிர்வு வரை தடுத்தவைத்த நிதிச் சாதனங்கள் | 16 | 967,851,460 | 996,388,159 |
| நீண்டகால முற்பணம் | 13 | 3,077,925,645 | - |
| மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | 12,261,545,042 | 8,143,175,372 |
| நடைமுறைச்சொத்துக்கள் | | | |
| சரக்குத் தொக்குகள் | 14 | 649,969,734 | 654,542,820 |
| வர்த்தக மற்றும் பிற வருமதிகள் | 15 | 930,050,921 | 1,244,842,344 |
| வருமதியான வருமான வரி | 26 | 21,393,847 | - |
| பருவ முதிர்வு வரை தடுத்துவைத்த நிதிச்சாதனங்கள் | 16 | 150,304,551 | 265,001,043 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 17 | 33,253,707 | 26,611,927 |
| மொத்த நடைமுறைச்சொத்துக்கள் | | 1,784,972,760 | 2,190,998,134 |
| மொத்த சொத்துக்கள் | | 14,046,517,802 | 10,334,173,506 |
| உரிமைப் பங்குகளும் பொறுப்புகளும் | | | |
| வெளிப்படுத்திய மூலதனமும் ஒதுக்கங்களும் | | | |
| வெளிப்படுத்திய மூலதனம் | 18 | 319,454,060 | 319,454,060 |
| மூலதன ஒதுக்கங்கள் | 19 | 25,000,000 | 25,000,000 |
| எதிர்மறை ஒதுக்கம் | | 336,454,462 | 336,454,462 |
| கடன்தீர்ப்பு நிதியம் | 20 | 1,689,978 | 1,689,978 |
| தடுத்துவைத்த ஈட்டல்கள் | | 1,257,791,931 | 1,230,935,630 |
| பங்குரிமையாளர்களின் நிதியம் | | 1,940,390,431 | 1,913,534,130 |
| நடைமுறையல்லாப் பொறுப்புகள் | | | |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | 21 | 28,214,500 | 23,679,444 |
| வட்டி ஏற்காத கடனெடுத்தல்கள் | 22 | 2,108,063 | 2,108,063 |
| வட்டி ஏற்கின்ற கடனெடுத்தல்கள் - நீண்ட கால | 22 | 5,671,067,321 | 459,037,810 |
| இலங்கை அரசாங்க திறைசேரிக்கு சென்மதியானவை | 23 | 3,799,067,113 | 5,020,014,987 |
| இளைப்பாற்று நன்மைக் கடப்பாடுகள் - பணிக்கொடை | 24 | 516,891,001 | 501,564,018 |
| பிற்போடப்பட்ட அரசாங்கக்கொடை | 25 | 60,662,036 | 79,866,848 |
| மொத்த நடைமுறையல்லா பொறுப்புகள் | | 10,078,010,034 | 6,086,271,170 |
| நடைமுறைப் பொறுப்புகள் | | | |
| வர்த்தக மற்றும் பிற சென்மதிகள் | 26 | 488,262,509 | 909,304,197 |
| சென்மதியான வருமான வரி | 27 | - | 3,658,164 |
| வட்டி ஏற்கின்ற கடனெடுத்தல்கள் - குறுங்கால | 22 | 1,119,615,137 | 883,008,244 |
| வங்கி மேலதிகப்பற்று | 28 | 420,239,691 | 538,397,601 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புகள் | | 2,028,117,337 | 2,334,368,206 |
| மொத்த உரிமைப்பங்குகளும் பொறுப்புகளும் | | 14,046,517,802 | 10,334,173,506 |

அடைப்பிற்குள் உள்ள எண்கள் கழித்தல்களைக் காட்டுகின்றன.

கடப்பாடுகளும் எதிர்பாராத சந்தர்ப்பங்களும் 29 மற்றும் 30

பக்கம் 05தொடக்கம் 36 வரை காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும்

இந்த நிதிக் கூற்றுகளின் அத்தியாவசியமான பகுதியாக அமையும்.

இந்த நிதிக்கூற்றுகள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் அவசியப்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளனவென்பதை உறுதிப்படுத்துகிறேன்.

……………………………………………

**திரு. எஸ்.ஏ. ஆனந்த ரஞ்சன்**
**உதவி நிதி முகாமையாளர்**

இந்த நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதும் சமர்ப்பிப்பதும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.
பணிப்பாளர் சபைக்காகவும் அதன் சார்பாகவும் அங்கீகரித்து கையொப்பமிட்டது.

……………………………………………

திரு.கே.பீ.பீ.எச். மிஹிரிபென்ன
தலைவர்

……………………………………………

திரு. ஜே. ஏ. எஸ்.ஜயகொடி
பணிப்பாளர்

கொழும்பு
2017மே 18
SSR/dm

| | வெளிப்படுத்திய மூலதனம் ரூ. | மூலதன **ஒதுக்கம்** ரூ. | மீள்கணிப்பீட்டு ஒதுக்கம் ரூ. | கடன்தீர்ப்பு **நிதியம்** ரூ. | தடுத்தவைத்த ஈட்டல்கள் ரூ. | கூட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 2014 மார்ச்சு 31 இல் மீதி வெளிப்படுத்துகை) | 319,454,060 | 25,000,000 | 336,454,462 | 1,689,978 | 1,016,009,439 | 1,698,607,939 |
| ஆண்டுக்கான நிகர இலாபம் | - | - | - | - | 241,957,917 | 241,957,917 |
| பிற விபரமான வருமானம் | - | - | - | - | (27,031,726) | (27,031,726) |
| 2014 திசெம்பர் 31 இல் மீதி | 319,454,060 | 25,000,000 | 336,454,462 | 1,689,978 | 1,230,935,630 | 1,913,534,130 |
| ஆண்டுக்கான நிகர நட்டம் | - | - | - | - | (16,650,157) | (16,650,157) |
| பிற விபரமான வருமானம் | - | - | - | - | 43,506,458 | 43,506,458 |
| 2015 திசெம்பர் 31 இல் மீதி | 319,454,060 | 25,000,000 | 336,454,462 | 1,689,978 | 1,257,791,931 | 1,940,390,431 |

அடைப்புக்குள்ளே இருக்கின்ற எ ண்கள் கழித்தல்களையே காட்டுகின்றன.

பக்கம் 05தொடக்கம் 36 வரை காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும்
இந்த நிதிக் கூற்றுகளின் அத்தியாவசியமான பகுதியாக அமையும்.

கொழும்பு
2017மே 18

| | 2015 டிசெம்பர் 31 இல் | 2014டிசெம்பர் 31 இல் |
|---|---|---|
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்வு | ரூ. | ரூ. |
| வரிவிப்புக்கு முந்திய நிகர இலாபம் | 3,817,741 | 248,159,134 |
| பின்வருவனவற்றுக்கான சீராக்கல்கள் | | |
| - ஆதனம், சாதனம்,பொறித்தொகுதி தேய்மானம் | 260,027,049 | 150,184,230 |
| - முதலீடுகளிலிருந்து வருமானம் | (73,076,212) | (61,925,734) |
| - வரி மிகையேற்பாட்டு இலாபத்திற்கு மீள்நிலைப்படுத்தல் | (161,291,918) | - |
| - வட்டிச் செலவுகள் | 93,512,932 | 87,689,789 |
| - குத்தகை வட்டி | 9,267,133 | 8,810,706 |
| - பிற்போடப்பட்ட கொடைகளின் பேரில் ஏற்பிசைவுசெய்த வருமானம் | (22,222,444) | (11,227,928) |
| - அறவிட முடியாத மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள் | 993,655 | 9,194,051 |
| - செலாவணி இலாபம் | (67,851,169) | (5,073,611) |
| - நிலையான சொத்துக்கள் விற்றொழித்தல் மீதான இலாபம் | - | (6,074) |
| - குறித்துரைத்த நன்மைத் திட்டங்கள்க்கான ஏற்பாடுகள் - பணிக்கொடை | 79,207,709 | 57,962,076 |
| - அகற்றிய பண்டங்களை பதிவழித்தல் | 2,676,936 | 2,689,934 |
| | 121,243,671 | 238,297,439 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்பாட்டு இலாபம் | 125,061,412 | 486,456,573 |
| சரக்குத் தொக்குகளின் (அதிகரிப்பு) /வீழ்ச்சி | 1,896,150 | (51,189,200) |
| வர்த்தக மற்றும் பிற வருமதிகளின் (அதிகரிப்பு) /வீழ்ச்சி | 296,064,588 | 81,734,401 |
| வர்த்தக மற்றும் பிற சென்மதிகளின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | (259,749,770) | (70,510,656) |
| | 38,210,968 | (39,965,455) |
| தொழிற்பாடுகளிலிருந்து பிறப்பித்த காசு | 163,272,380 | 446,491,118 |
| செலுத்திய வட்டி | (93,512,932) | (87,689,789) |
| செலுத்திய வரி -பொருளாதாரசவைகள் கட்டணம் மற்றும் வருமான வரி | (23,251,674) | (13,805,722) |
| குறித்தரைத்த நன்மைத் திட்டங்களின் கொடுப்பனவுகள் - பணிக்கொடை | (20,374,268) | (17,680,285) |
| | (137,138,874) | (119,175,796) |
| தொழிற்பாட்டுசெயற்பாடுகளிலிருந்து நிகர காசுப் பாய்வு | 26,133,506 | 327,315,322 |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்வு | | |
| ஆதனம், சாதனம்,பொறித்தொகுதிகளின் கைக்கொள்ளல் | (63,676,962) | (90,879,314) |
| நிர்மாணிப்பு பணிகளில் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளிலான மூலதனம் | (1,265,330,811) | (44,092,687) |
| செலுத்திய நீண்டகால முற்பணம் | (3,077,925,645) | - |
| திறைசேரியிடமிருந்து கிடைத்த கடன் | 4,345,757,033 | - |
| கால்நடைவள விற்றொழித்தலில் இருந்து கிடைத்த பணம் | - | 86,000 |
| கிடைத்த வட்டி | 73,076,212 | 61,925,734 |
| ஆதனம், சாதனம்,பொறித்தொகிதி விற்றொழித்தலால் கிடைத்'த பணம் | - | 926,839 |
| நீக்கப்பட்டவை/(புதிய) குறுங்கால மற்றும் நெடுங்கால முதலீடுகள்' | 211,084,360 | (25,133,578) |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து நிகர காசுப்பாய்வு | 222,984,187 | (97,167,006) |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்வு | | |
| அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கொடை | 3,017,633 | 49,932,434 |
| செலுத்திய குத்தகை வாடகை | (48,707,299) | (29,837,330) |
| ஆண்டில் வழங்கிய கடன் | - | 20,012,750 |
| கடன் மற்றும் கடனெடுத்தல் மீளச்செலுத்துதல் | (78,628,337) | (57,972,381) |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்து நிகர காசு | (124,318,003) | (17,864,527) |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் நிகர அதிகரிப்பு | 124,799,690 | 212,283,789 |
| ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை (குறிப்பு அ) | (511,785,674) | (724,069,463) |
| ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை (குறிப்பு ஆ) | (386,985,984) | (511,785,674) |
| ஆண்டின் தொடக்கத்தில் | | குறிப்பு அ |
| வங்கியில் இருந்த மீதிகள் | 22,813,784 | 28,734,485 |
| கையிலுள்ள காசு | 3,798,143 | 5,013,679 |
| | 26,611,927 | 33,748,164 |
| வங்கி மேலதிகப் பற்று | (538,397,601) | (757,817,627) |
| | (511,785,674) | (724,069,463) |
| ஆண்டின் இறுதியில் | | குறிப்பு ஆ |
| வங்கியில் இருந்த காசு | 27,273,015 | 22,813,784 |
| கையில் உள்ள காசு | 5,980,692 | 3,798,143 |
| | 33,253,707 | 26,611,927 |
| வங்கி மேலதிகப் பற்று | (420,239,691) | (538,397,601) |
| | (386,985,984) | (511,785,674) |

அடைப்புக்குள்ளே உள்ள எண்ணிக்கைகள் கழித்தல்களைக் காட்டுகின்றன.

பக்கம் 05தொடக்கம் 36 வரை காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும்

கொழும்பு
2017மே 18

**1. கணக்கீட்டுக் கொள்கைகள்**

**1.1 நிறுவனம்சார் தகவல்கள்**

**1.1.1 சட்டமுறையான மற்றும் வாழிடத் தன்மை**

மில்கோ (பிரை) லிமிடெட் என்பது இலங்கையில் தாபிக்கப்பட்டதும் அங்கு நிரந்தர வாழிடம்கொண்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கம்பெனியாகும்.

“வரையறுக்கபட்ட லங்கா கிரியா பால் கைத்தொழில் (தனி) கம்பெனி” என்ற வகையில் 1996மே மாதம் 09 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது. கம்பெனியின் பெயர் “மில்கோ (பிரை) லிமிடெட்” என 2001 யூலை 23 ஆந் திகதி மாற்றப்பட்டது. இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய தேசிய பால் அபிவிருத்திச் சபைக்கும் இடையில் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட லங்கா பால் உற்பத்தி (தனி) கம்பெனிக்கு 1998 பெப்ருவரி 03 ஆந் திகதியளவில் சொந்தமாக விளங்கிய மற்றும் அக்கம்பெனி பாவித்த (காணிகள் தவிர்ந்த) அனைத்துவிதமான ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் உரிமையும்வரையறுக்கப்பட்ட லங்கா பால் உற்பத்தி (தனி) கம்பனியால் அத்திகதியளவில் பாவிக்கப்பட்ட காணி மற்றும் கட்டடங்களின் குத்தகை உரிமையும் 1998 பெப்ருவரி 04 ஆந் திகதி தொடக்கம் கம்பெனிக்கு மாற்றப்பட்டுள்ளது. அவ்விதமாக மாற்றப்பட்ட சொத்துக்களின் நிகர பெறுமதி ரூ. 306,500,020/- ஆகும். மேலும் 2000 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய இலங்கை பகிரங்க பொறுப்புமுயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கடிதத்திற்கிணங்க குத்தகைக்குபெறப்பட்ட காணி மற்றும் கட்டடங்களின் வருடாந்த குத்தகை வாடகை ரூ. 20,427,900/- பணத்தொகை கூட்டுத் தொழில்முயற்சியாக்கும் அமைச்சரவை தீர்மானத்திற்கிணங்க கைவிடப்பட்டுள்ளது. கூட்டுத் தொழில்முயற்சி உடன்படிக்கை தொடர்ந்தும் அமுலில் இல்லாவிடினும் மேற்சொல்லப்பட்ட அரசாங்க காணி மற்றும் கட்டடங்களுடன் தொடர்புடைய கணக்குகளில் ஏற்ற சீராக்கல்களை கம்பெனி மேற்கொள்ளவில்லை.

கம்பெனியின் பதிவுசெய்த அலுவலகம் இலக்கம் 46/56, நவம் மாவத்த, கொழும்பு 02 எனும் முகவரியில் அமைந்துள்ளதோடு பிரதான தொழில்முயற்சி அலுவலகளும் அந்த இடத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கம்பெனியின் பிரதான தொழிற்சாலைகள் நாரஹேன்பிற்ற, அம்பேவெல, திகன மற்றும் பொலநறுவை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

**1.1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்**

ஆண்டில் பால்சேகரித்தல், பதப்படுத்தல், பொதிசெய்தல், விநியோகித்தல் மற்றும் பால்சார்ந்த உற்பத்திகளை சந்தைப்படுத்துவதே கம்பெனியால் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளாக அமைந்தன.

**1.1.3 வெளியிட அதிகாரம் கையளிக்கப்பட்ட திகதி**

2017 மே 18 ஆந் திகதி பணிப்பாளர்சபை பிரேரணைக்கிணங்க 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளை வெளியிட அதிகாரம் கையளிக்கப்பட்டது.

1.1.4 நிதிக் கூற்றுகள் மீதான பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் பற்றிய பொறுப்பினை பணிப்பாளர்சபை வகிக்கின்றது. நிதிக்கூற்றுகள் பற்றிய பணிப்பாளர்களின் பொறுப்பு “பணிப்பாளர்களின் பொறுப்பு பற்றிய கூற்று” எனும் பகுதியில் காட்டப்பட்டுள்ளது.

**1.2 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு**

**1.2.1 பொதுவான கணக்கீட்டுக்கொள்கைகள்**

**1.2.1.1 நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படை**

இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவகத்தால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு(SLFRS/LKAS)அமைவாக நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**1.2.1.2 கணக்குகளின் அடிப்படை**

நியாயமான பெறுமானத்திற்கிணங்க கணக்கிடப்பட்ட ஒருசில சொத்துக்களும் பொறுப்புக்களும் தவிர்ந்ததாக இந்த நிதிக்கூற்றுகள் வரலாற்றுக் கிரய மரபின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

**1.2.1.3 நடைமுறைசார்ந்தமற்றும் சமர்ப்பித்தலிலான புழக்கத்திலுள்ள பணம்**

சம்பந்தப்பட்ட நிறுவனம் இயங்கிவருகின்ற அடிப்படை பொருளாதார சுற்றுச்சூழலில் புழக்கத்திலுள்ள பணத்தைப் பாவித்து நிதிக் கூற்றுகளில் அடங்கியுள்ள வகையினம் அளவீடு செய்யப்படுகின்றது.( நடைமுறைசார்ந்த புழக்கத்திலுள்ள பணம்) கம்பெனியின் நடைமுறைசார்ந்த மற்றும் சமர்ப்பித்தலிலான புழக்கத்திலுள்ள பணமான இலங்கை ரூபாவில் நிதிக்கூற்றுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**1.2.1.4 இசைவுக் கூற்று**

2015 திசெம்பர் 31 இல் கம்பெனியின் நிதிநிலைமை பற்றிய கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் கம்பெனியின் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் (நிதிக் கூற்றுகள்)இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (இ.க.நி) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிதிக்கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் 2007 இன் 07 ஆம் இலக்க

கம்பெனிகள் சட்டத்திற்கு அமைவானதாகும்.

**1.2.1.5 இடையறா வழியுரிமை**

இடையறா வழியுரிமைக்காக கம்பெனி கொண்டுள்ள ஆற்றல் பற்றி கம்பெனி பணிப்பாளர்களால் மதிப்பீடொன்று செய்யப்பட்டு காணத்தக்கதாக உள்ள முன்வரும் எதிர்காலத்திற்காக தொழில்முயற்சி நடவடிக்கைகளில் ஈடுபட அவசியமான வளங்கள் கம்பெனிவசம் இருப்பதாக திருப்தியடைந்தனர். மேலும் கம்பெனிக்கு இடையறாத வழியுரிமைக்காக உள்ள ஆற்றல்பற்றி கணிசமான சந்தேகத்தை ஏற்படுத்துகின்ற ஐயப்பாட்டு நிலையைமுகாமைத்துவத்தினால் காணக்கூடியதாக இல்லை. எனவே "இடையறாத வழியுரிமையை" அடிப்படையாகக்கொண்டு நிதிக்கூற்றுகள் தொடர்ந்தும் தயாரிக்கப்படும்.

**1.2.1.6 ஒப்பீட்டுரீதியான தகவல்கள்**

கம்பெனியால் கணக்கீட்டுக் கொள்கைகள்தொடர்ச்சியாக பிரதியீடு செய்யப்பட்டுள்ளதோடு அவை முந்திய வருடத்தில் பிரயோகித்த கொள்கைகளுடன் நேரொத்தனவாக அமைகின்றன. அவசியமான இடங்களில் முந்திய வருடத்தின் எண்ணிக்கைகளும் வாசகங்களும் நடப்பு வருடத்தில் சமர்ப்பிக்க ஒத்துவரத்தக்கதாக மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளன.

**1.2.1.7 வெளிநாட்டு பணக்கொடுக்கல் வாங்கல்கள்**

அனைத்து அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்களும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்ட திகதிகளுடன் ஏற்புடையதான செலாவணி விகிதத்தில் அறிக்கையிடுகின்ற நிதி அலகான இலங்கை ரூபாவாக மாற்றப்படுகின்றன.

வெளிநாட்டுப் பணத்தில்பெயரிடப்பட்டுள்ள பணச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஆண்டின் இறுதியில் நிலவுகின்ற அந்நிய செலாவணி விகிதத்தைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவுக்கு இணையான பணத்திற்கு மாற்றப்படுவதோடு அதன் பெறுபேறாகத் தோன்றுகின்ற இலாபம் அல்லது நட்டம் விபரமான வருமானக் கூற்றில் கணக்குப்பதியப்பட்டுள்ளது.

பணரீதியற்ற சொத்துக்களும் பொறுப்புக்களும் நிர்ணயிக்கப்படுகின்ற தருணத்தில் நிலவிய செலாவணி விகிதத்தைப் பிரயோகித்து மாற்றப்படும். அதன் விளைவாகத் தோன்றுகின்ற இலாபம் மற்றும் நட்டத்திற்கான காரணங்கள் ஏனைய விபரமான வருமானத்தில் கணக்குப்பதியப்பட்டுள்ளது.

**1.2.1.8 பொருண்மைத்தன்மையும் திரட்சியும்**

இணையான வகையினம் உரித்தாகின்ற ஒவ்வொரு பொருண்மையான தொகுதியும் நிதிக்கூற்றுகளில் வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளன. இயல்பில் அல்லது பணியில் இணையற்ற வகையினம் அவை பொருண்மையானதாக அமையாவிடின் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படும்.

**1.2.1.9 தீர்வுக்கட்டமான கணக்கீட்டு மதிப்பீடுகளும் தீர்ப்புகளும்**

**அ) தீர்ப்புகள்**

கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்திக்கொள்ளும் செயற்பாட்டில் நிதிக்கூற்றுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகள் மீது பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற மதிப்பீடுசெய்தல்கள் தொடர்பானவை தவிர்ந்ததாக முகாமைத்துவம் தீர்ப்புக்களுக்கு வந்துள்ளது.

**ஆ) மதிப்பீடுகளும் ஊகங்களும்**

கம்பெனியின் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் அறிக்கைசெய்யப்பட்டுள்ள வருமானம், செலவுகள், சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் அளவுகள் மற்றும் அறிக்கையிடல் திகதியில் நிகழ்தகு பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் மீது தாக்கமேற்படுத்துகின்ற தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை முகாமைத்துவம் மேற்கொள்ளல் அவசியமானதாகும்.

அடுத்துவருகின்ற நிதியாண்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டுசெல்லல் பெறுமானங்களில் போதியளவிலான சீராக்கல்களை மேற்கொள்ள நேரிடுகின்ற கணிசமான இடர்களைக்கொண்ட நிதிநிலைமைத் திகதிக்கு மதிப்பீட்டு ஐயப்பாட்டின் எதிர்காலம் மற்றும் ஏனைய முக்கியமான தோற்றுவாய்களுடன் தொடர்புடைய முக்கியமான ஊகங்கள் கவனத்திற்கு இலக்காக்கப்பட்டுள்ளன.

**1.3 சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படையும்**

**1.3.1 ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி**

**அ) அளவீடு**

அனைத்துவிதமான ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளும் தொடக்கத்தில் கிரயத்திற்கிணங்க அறிக்கை செய்யப்படும். பின்னர் ஆதனம், சாதனம் மற்றம் பொறித்தொகுதி வகையினங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படுகையில் அத்தகைய சொத்துக்கள் அடங்குகின்ற முழுமையான வகையின வகுப்பு மீள்மதிப்பீடு செய்யப்படும்.

அன்றாடதிருத்தவேலைகளை தவிர்த்ததாக ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகள் திரண்ட தேய்மானம் மற்றும் பெறுமதியின் திரண்ட சேதத்தைக் கழித்து கிரயத்திலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஏற்றுக்கொள்ள அவசியமான மூலப்பிரமாணங்களை பூர்த்திசெய்திருப்பின் அந்தக் கிரயத்தில் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் ஒரு பகுதியை மீள்நிறுவவேண்டி நேரிடுகின்ற சந்தர்ப்பத்தில் ஏற்கநேரிடுகின்ற கிரயம் உள்ளடங்குகின்றது. ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் முக்கியமான பகுதிகள் காலத்துக்குகாலம் மீள்நிறுவப்பட வேண்டிய அவசியமேற்பட்டால் கம்பெனி அத்தகைய பகுதிகள் தனித்துவமானபயனுள்ள ஆயுட்காலத்தைக்கொண்ட தனித்தனியான சொத்துக்களாக கருதப்பட்டு அதற்கமைவாக அந்த வகையினம் தேய்மானம் செய்யப்படும்.

பிரதான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டவிடத்து ஏற்பிசைவு செய்தலுக்கான மூலப்பிரமாணங்கள் நிறைவுசெய்யப்பட்டிருப்பின் அதன் கிரயம் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் மீள்நிறுவுகையாக கொண்டுசெல்லல் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய அனைத்துவிதமான திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல் கிரயங்கள் மேற்படி கிரயங்கள் உறப்பட்ட தருணத்தில் இலாபம் அல்லது நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி வகையினமொன்று விற்றொழித்தலின் மீது அல்லது அதனை பாவித்தலில் அல்லது விற்றொழித்தல் மூலமாக எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்காவிடின் அந்த வகையினம் ஏற்பிசைவு அற்ற ஒரு வகையினமாக அமையும். ஏற்பிசைவினை விற்றொழித்தலால் கிடைக்கின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (விற்றொழித்தலால் கிடைத்த வருமானம் மற்றும் கொண்டுசெல்லல் பெறுமானத்திற்கிடையிலான வித்தியாசம்) இருப்பின் அது சொத்து ஏற்பிசைவு செய்தலை இடைநிறுத்திய வருடத்தின் விரிவான கணக்குக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**ஆ) ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் பயனுள்ள ஆயுட்காலம்**

ஒவ்வோர் அறிக்கையிடல் தினத்திலும் சொத்தொன்றின் மீதிப்பெறுமானம், பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானம் செய்கின்றமுறையியல்கள் கம்பெனியால் மீளாய்வு செய்யப்படுகின்றது.இந்த பெறுமானங்கள், விகிதங்கள் மற்றும் முறையியல்களை மதிப்பீடு செய்கையில் தொழில்சார் நிபுணர்களின் அபிப்பிராயத்திற்கிணங்க முகாமைத்துவம் மேற்கொண்ட தீர்ப்புகள் நடைமுறைப்படுத்தப்படும்.

**இ) தேய்மானம்**

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதியொன்றின் ஒவ்வொரு பகுதியினதும் பயனுள்ள ஆயுட்காலம் பூராவிலும் எளிய நேர்கோட்டு அடிப்படையில் இலாபத்தின் அல்லது நட்டத்தின் தேய்மானம் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு சொத்தில் உள்ளடங்குகின்ற எதிர்கால பொருளாதார நன்மைகளின் நுகர்வுக்காக எதிர்பார்த்துள்ள போக்கானதுஅந்த முறையியலை மிக நெருக்கமாக பிரதிபலிப்பதாலேயே அவ்வாறு செய்யப்படுகின்றது.

நிதிக் குத்தகையின்கீழ் பெறப்பட்டுள்ள சொத்துக்கள் குத்தகைக் காலப்பகுதி அல்லது அதன் பயனுள்ள ஆயுட்காலம் ஆகிய இரண்டு காலப்பகுதிகளில் குறைந்த காலத்தின் அடிப்படையிலேயே தேய்மானம் செய்யப்படுகின்றது.

பொருளாதார ரீதியிலான பயனுள்ள ஆயுட்காலம் கீழே காட்டப்பட்டுள்ளது.

கட்டடங்கள் 20வருடங்களுக்கு மேற்பட்டவை

சாதனமும் பொறித்தொகுதிகளும் 04 வருடங்கள் தொடக்கம் 15 இற்கு மேற்பட்டவை

தளபாடமும் பொருத்திகளும் 03 வருடங்கள் தொடக்கம் 05 இற்கு மேற்பட்டவை

ஆய்வுகூட உபகரணங்கள் 03 வருடங்கள் தொடக்கம் 05 இற்கு மேற்பட்டவை

மோட்டார் வாகனங்கள் 08 வருடங்கள் தொடக்கம் 15 இற்கு மேற்பட்டவை

கருவிகளும் உபகரணங்களும்03 வருடங்கள் தொடக்கம் 10 இற்கு மேற்பட்டவைஅலுவலக உபகரணங்கள் 2.5வருடங்கள் தொடக்கம் 05 இற்கு மேற்பட்டவை

போத்தல்களும் பொதியிடல் பாத்திரங்களும்04 வருடங்களுக்கு மேற்பட்டவை

கணனி 02 வருடங்கள் தொடக்கம் 04 இற்கு மேற்பட்டவை போத்தல் குளிரூட்டிகள்2.5வருடங்கள் தொடக்கம் 05 இற்கு மேற்பட்டவை

மென்பொருள்கள் 03 வருடங்களுக்கு மேற்பட்டவை

பால் கொள்கலன்கள் 05 வருடங்களுக்கு மேற்பட்டவை

சொத்தொன்றின் தேய்மானம் அதனைப் பயன்பாட்டுக்காக எடுக்கக்கூடிய தருணத்தில் இருந்து ஆரம்பிப்பதோடு தேய்மானம் விற்பனைக்காகவென சொத்து வகைப்படுத்தப்பட்ட தினத்தில் அல்லது சொத்து அகற்றப்படுகின்ற தினம் ஆகிய தினங்களில் முதலில் உருவாகின்ற தினத்திலேயே நிறுத்தப்படும்.

ஈ) மீளளித்தல் கிரயம்

ஆரம்பத்திலேயே மதிப்பீடு செய்யப்பட்ட செயலாற்றுகை தரநியமங்களிலிருந்து எதிர்பார்த்த பொருளாதார நன்மைகளை திருத்துதல் அல்லது பேணிவரும்பொருட்டு ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புக்காக உற்பட்ட செலவினம் அவ்வாறு உற்பட்டவிடத்து செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

**உ) ஏற்பிசைவு செய்தலை மறுத்தல்**

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதியை விற்றொழித்தலின் பேரில் அல்லது அதனை பாவிப்பதன் மூலமாக விற்றொழித்தலால் எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்காவிடின் அந்த வகையினம் ஏற்பிசைவு அற்ற வகையினமாக அமையும். சொத்து ஏற்பிசைவினை விற்றொழித்தலிலிருந்து கிடைக்கின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது விற்றொழித்தலில் இருந்து கிடைத்த வருமானம் மற்றும் சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமானத்திற்கு இடையிலான வித்தியாசமாகவே கணிப்பீடுசெய்யப்படும்.

**1.3.2 குத்தகை**

**(அ) நிதிக் குத்தகை - கம்பெனி குத்தகைக்கு விடுநராக அமையுமிடத்து**

குத்தகைக் காலத்தில் சொத்தாண்மைக்கு இடைநேர்விளைவுடையதான அனைத்து இடர்களையும் நன்மைகளையும் ஏற்றுக்கொள்ளுமிடத்து அவை நிதிச் சொத்துகளாக வகைப்படுத்தப்படும். குத்தகை மூலமாக கைக்கொள்ளப்படுகின்ற சொத்துக்கள் திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட சேதஇழப்புகள் கழிக்கப்பட்டு அவற்றின் நியாயமான பெறுமதியில் அல்லது ஆரம்பத்தில் குறைந்தபட்ச குத்தகை செலுத்துகின்ற நடப்புப் பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்ததற்கு சமமான பெறுமதிக்கே அளவீடு செய்யப்படும்.

குத்தகைக்கு விடுநருக்கு செலுத்தவேண்டிய நேரொத்த ஆரம்பத்தொகை ஒரு பொறுப்பாக காட்டப்படும். எதிர்கால காலப்பகுதிக்காக ஒதுக்கப்பட்ட நிதிசார் கட்டணங்கள் குறிப்புகளில் தனிவேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வோரண்டுடனும் தொடர்புடைய வாடகை கட்டும் வட்டிக்கோட்பாடுகள்ஒவ்வொரு காலப்பகுதிக்காகவும்பொறுப்பின் எஞ்சிய மீதியின் பேரில்நிலையான பருவங்களில் வட்டி வீதமொன்றை உருவாக்கும்பொருட்டு குத்தகை காலப்பகுதி பூராவிலும் விரிவான வருமானக் கூற்றில் குறிப்பு பதியப்படும்.

குத்தகை சொத்துக்கு அல்லது அதன்மீதான விருத்திசெய்தல்களுக்கான கிரயம்

குத்தகையின் எஞ்சியுள்ள காலப்பகுதி அல்லது விருத்திசெய்தல்களின் பயனுள்ள

ஆயுட்காலம் ஆகிய இரண்டில் மிகவும் குறுகிய காலப்பகுதி பூராவிலும்

மூலதனமயமாக்கல் மற்றும்தேய்மானம்செய்தல் மேற்கொள்ளப்டும்.

நிதிக்குத்தகை பெறுபேறாக அமைகின்ற விற்பனையும் குத்தகைக்கெடுத்தல் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய சொத்துக்களின் கொண்டுசெல்லல் பெறுமதியின் பேரில் ஏதேனும் விற்பனை வருமான மிகைநிலை குத்தகைப் பருவம் பூராவிலும் பிற்போடப்பட்டு மதிப்பிறக்கம் செய்யப்படும்.

**ஆ) தொழிற்பாட்டுக் குத்தகை**

குத்தகை காலப்பகுதியின்கீழ் சொத்தொன்றின் அனைத்துவிதமான இடர்களும் நன்மைகளும் குத்தகை விடுநரால் பொருண்மைரீதியாக உண்மையிலேயே வகிக்குமிடத்து அத்தகைய குத்தகை தொழிற்பாட்டுக் குத்தகை என வகைப்படுத்தப்படும்.

தொழிற்பாட்டுக் குத்தகையின்கீழ் செலுத்தப்படுகின்ற குத்தகை செலுத்துதல் (காப்புறுதி மற்றும் பராமரிப்பு போன்ற சேவைகள் கிரயம் தவிர்ந்த) எளிய வழிமுறை அடிப்படையில் குத்தகை காலப்பகுதி பூராவிலும் வருமானக்கூற்றில் செலவினமாக காட்டப்பட்டுள்ளது.

### 1.3.3 நிதியல்லாத சொத்துக்களின் சேதஇழப்பு

ஒவ்வோர் அறிக்கையிடல் திகதியிலும் ஏதேனும் சொத்து சேதமடைவதற்கான குறிப்பாலுணர்த்துதல் உள்ளதாவென திட்டவட்டமாக அறிந்துகொள்வதற்காக கம்பெனியால் மதிப்பீடு செய்யப்படும். அத்தகைய சேதமேற்படுத்தக்கூடிய பண்புகள் நிலவுமிடத்து அல்லது சொத்துக்காக வருடாந்த சேதஇழப்பு பரிசோதனைகள் அவசியமாகுமிடத்து கம்பெனி சொத்தில் மீண்டும் அறவிடக்கூடிய பெறுமானம் மதிப்பீடு செய்யப்படும். சொத்தொன்றின் மீள் அறவிடக்கூடிய பெறுமானம் என்பது பிற சொத்துக்கள் அல்லது சொத்துக்கள் தொகுதியிலிருந்து பெரிதும் புறம்பாக அந்த சொத்து பணம் பாய்ந்துவருவதை மேற்கொள்ளாவிடின் சம்பந்தப்பட்ட சொத்தின் அல்லது பணம் பிறப்பிக்கின்ற கூறின் விற்பனைக்காக செலவாகின்ற கிரயம் மற்றும் பாவனையின் பெறுமதி குறைக்கப்பட்ட நியாயமான பெறுமதியாகும். சொத்தொன்றின் கொண்டுசெல்லல் பெறுமானம் அதன் மீள் அறவிடக்கூடிய பெறுமானத்தை விஞ்சியதாக செல்லுமிடத்து சொத்து சேதமடைந்துள்ளதாக கருதப்படுவதோடு அதன் மீள் அறவிடக்கூடிய பெறுமானம் குறைக்கப்படும். பாவிக்கக்கூடிய பெறுமானத்தை மதிப்பீடு செய்கையில் பணத்தின் காலப்பெறுமானம் மற்றும் சொத்துக்கு தனித்துவமான இடர்களின் நடப்புச்சந்தை மதிப்பீட்டினை பிரதிபலிக்கத்தக்கதாக குத்தகைக்கு முந்திய கழிவு விகிதத்தை பாவித்து மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வுகள் நடப்பு பெறுமானம் வரை கழிவு செய்யப்படும்.

இடையறாத தொழிற்பாடுகளின் சேத நட்டங்கள் விபரமான வருமானக்கூற்றில் சேதமடைந்த சொத்தின் பணிகள் மற்றும் தொடர்ச்சியானசெலவுத் தொகுதிகளில் இனங்காணப்படும்.

நற்பெயர் தவிர்ந்த சொத்துக்கள் சம்பந்தமாக ஒவ்வோர் அறிக்கையிடல் திகதியன்றும் சொத்துக்கள் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படுவதோடு அதனூடாக முன்னர் இனங்கண்ட சேத நட்டங்கள் தொடர்ந்தும் நிலவுவதில்லை என்பதற்கும் அவை குறைவடைந்துள்ளன என்பதற்கும் ஏதேனும் அவதானிப்பினை மேற்கொண்டுள்ளதா என விசாரிக்கப்படும். அத்தகைய அவதானிப்பு இருப்பின் சபையினால் சொத்தின் மீள் அறவிடக்கூடிய பெறுமானம் மதிப்பீடு செய்யப்படும்.

இறுதியாக சேதநட்டங்கள் அவதானிக்கப்பட்ட தருணத்தில் இருந்து சொத்தின் மீள் அறவிடத்தக்க பெறுமானத்தை தீர்மானிப்பதற்காக பாவித்த மதிப்பீடு மாற்றமடையுமாயின் மாத்திரமே எதிர்மறையாக்கப்படும். அது அவ்வாறு அமையின் சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமானம் அதன் மீள் அறவிடத்தக்க பெறுமதிக்கு உயர்த்தப்படும். முந்திய வருடங்களில் சொத்துக்கான சேத இழப்பீடு இனங்காணப்படவில்லையாயின்மேற்படி அதிகரித்த பெறுமதிக்கு தேய்மானம் இன்றி நிச்சயிக்க இடமிருந்த கொண்டுசெல்லல் பெறுமதியை விஞ்சிசெல்ல இயலாது. சொத்தினை எதிர்மறைசெய்த பெறுமதிக்கு பேணிவராவிட்டாலொழிய அத்தகைய எதிர்மறை விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

**1.3.4 முற்றுப்பெறாத மூலதன வேலைகள்**

சொத்து முதல்த்தடவையாக பயன்பாட்டுக்காக ஈடுபடுத்தப்படுகின்றவிடத்து தற்போது ஈடேறுகின்ற மூலதன வேலைகள் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் கணக்கிற்கு மாற்றப்படும்.

**1.3.5 நிதிச் சொத்துக்கள்**

பின்வரும் தொகுதிகளுக்கு கம்பெனி தனது சொத்துக்களை வகைப்படுத்தும். அவையாவன இலாபம் மற்றும் நட்டம் மூலமாக நியாயமான பெறுமானம்கொண்ட நிதிச் சொத்துக்கள்,கடனும் வருமதிகளும், விற்பனைக்காக உள்ள மற்றும் பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் என்பனவாகும். நிதிச் சொத்துக்கள் கையேற்கப்பட்ட பணியின் பேரில் வகைப்படுத்தல் தங்கிஉள்ளது. அடிப்படை ஏற்பிசைவின் பேரில் தனது நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை முகாமைத்துவம் தீர்மானிப்பதோடு இந்த வகைப்பெயர் ஒவ்வோர் அறிக்கையிடல் தினத்திலும் மீண்டும் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படும்.

**1.3.5.1 அடிப்படை இனங்காணலும் அளவிடுதலும்**

அடிப்படை இனங்காணலின்போது கம்பெனி தனது நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை நிர்ணயிக்கும். தொடக்கத்தில் அனைத்து நிதிச் சொத்துக்களும் நியாயமான பெறுமானத்துடன் இனங்காணப்படும். நியாயமான பெறுமானமற்ற சொத்துக்கள் நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் கிரயம் மற்றும் இலாபநட்டத்திற்கிணங்க இனங்காணப்படும்.

சந்தை மரபு மற்றும் ஒழுங்குவிதிகள் மூலமாக உரிய காலச்சட்டகத்திற்குள் ஒப்படைக்கவேண்டிய நிதிச்சொத்துக்களை கொள்வனவுசெய்தோ அல்லது விற்பனைசெய்தோ இருப்பின் அவற்றை விற்பனைசெய்தல் அல்லது கொள்வனவுசெய்தல் இடம்பெற்ற தினத்தில் இனங்காணப்படும். அதாவது சொத்துக்களை கொள்வனவுசெய்ய அல்லது விற்பனைசெய்ய கம்பெனி உடன்பட்ட தினமாகும்.

பணம், நிலையான வைப்புகள் மற்றும் வர்த்தகத்தில் மற்றும் பிற வருமதிகளிலான முதலீடுகள் கம்பெனியின் நிதிச்சொத்துகளில் அடங்குகின்றன.

**1.3.5.2 அடுத்தடுத்த அளவீடுசெய்தல்கள்**

நிதிச் சொத்துக்களின் அடுத்தடுத்த அளவீடு அந்த சொத்துக்களின் வகைப்படுத்தலின் பேரில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு இடம்பெறும்.

**(அ) இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயமான பெறுமதிகொண்ட நிதிச்சொத்துக்கள்**

இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயமான பெறுமதிகொண்ட நிதிச்சொத்துக்களில் விற்பனைக்காக வைத்துக்கொண்ட நிதிச்சொத்துக்கள் மற்றும் இலாபம், நட்டங்கள் மூலமாக தொடக்கத்தில் நியாயமான பெறுமானத்தின்பேரில் இனங்கண்ட நிதிச்சொத்துக்கள், இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயமான பெறுமானத்திற்கு தொடக்கத்திலேயே இனங்காணலின்பேரில்நிமித்தமாகக்கொண்டநிதிச் சொத்துக்கள் அடங்குகின்றன. விற்பனைக்காக அல்லது குறுகிய எதிர்காலத்தில் மீண்டும் கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட நிதிச்சொத்துக்களை விற்பனைக்காக வைக்கப்பட்ட நிதிச்சொத்துக்களாக வகைப்படுத்தப்படும்.

**(ஆ) கடனும் வருமதிகளும்**

கடனும் வருமதிகளும் முனைப்பான சந்தையில் விலைமட்டங்களை சமர்ப்பித்திராத நிலையான மற்றும் திட்டவட்டமான செலுத்துதல்களைக்கொண்ட நேரிலியற்ற நிதிச் சொத்துக்காகும். ஆரம்ப ஏற்பிசைவுக்கு அடுத்தடுத்ததாக கடனும் வருமதிகளும் ஏதேனும் சேத நட்டங்களைக் கழித்து விளைபயன்மிக்க வட்டி முறையியலைப் (EIR) பயன்படுத்தி மதிப்பிறக்கம்செய்த கிரயத்திற்கே கணிப்பீடு செய்யப்படுகின்றது.மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயமானது கைக்கொள்ளலின்பேரில் ஏதேனும் கழிவு அல்லது பரிசூதியம்மற்றும்விளைபயன்மிக்க வட்டி வீதத்தின் உள்ளார்ந்தபகுதியான கட்டணங்கள் அல்லது கிரயத்தை கவனத்திற்கொண்டே கணக்கீடு செய்யப்படுகின்றது. விளைபயன்மிக்க வட்டி வீத மதிப்பிறக்கம் விபரமான வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. சேதஇழப்பிலிருந்து தோன்றுகின்ற நட்டங்கள் விபரமான வருமானக்கூற்றில் நிதி வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(இ) பருவ முதிர்வுவரை தடுத்துவைத்த முதலீடுகள்**

நிலையான மற்றும் திட்டவட்டமான செலுத்துதல்களைக்கொண்ட நேரிலியற்ற நிதிச்சொத்துக்களும் நிலையான முதிர்ச்சிகளும் கம்பெனிக்கு பருவ முதிர்வுவரை தடுத்துவைக்கின்ற ஆக்கமுறையான நோக்கமும் ஆற்றலும் உள்ளவிடத்து அவை பருவ முதிர்வுவரையான தடுத்துவைத்தலாக வகைப்படுத்தப்படும். ஆரம்ப கணிப்பீட்டின் பின்னர் பருவ முதிர்வுவரை தடுத்துவைத்த முதலீடுகள் சேதங்கள் கழிக்கப்பட்டு விளைபயன்மிக்க வட்டி முறையியலைப் பயன்படுத்தி அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிப்பீடு செய்யப்படும். மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயமானது கைக்கொள்ளலின்பேரில் ஏதேனும் கழிவு அல்லது பரிசூதியம்மற்றும் விளைபயன்மிக்க வட்டி வீதத்தின்உள்ளார்ந்த பகுதியாக அமைகின்ற கட்டணங்கள் அல்லது கிரயத்தை கவனத்திற்கொண்டே கணிப்பீடு செய்யப்படுகின்றது. விளைபயன்மிக்க வட்டி வீத மதிப்பிறக்கமானது விபரமான வருமானக்கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதத்திலிருந்து தோன்றுகின்ற நட்டங்கள் விபரமான வருமானக்கூற்றில் நிதிக்கிரயத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**(ஈ) விற்பனைக்காக உள்ள நிதி முதலீடுகள்**

விற்பனைக்காக உள்ள நிதி முதலீடுகளில் உரிமைப்பங்குகளும் கடன் பிணையங்களும் அடங்கும். விற்பனைக்காகவென வகைப்படுத்தப்பட்டுள்ள உரிமைப்பங்கு முதலீடுகளாக அமைவன விற்பனைக்காக வகைப்படுத்தப்பட்டிராத அல்லது இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயமான பெறுமானத்தின் நிமித்தமற்றவையாகும். இந்த தொகுதியைச்சேர்ந்த கடன் பிணையங்களாக அமைவன ஐயப்பாடான காலப்பகுதிக்காக தடுத்துவைக்க கருதுகின்ற மற்றும் திரவத்தன்மை அவசியப்பாடுகளுக்கான பிரதிபலிப்பாக அல்லது சந்தை நிலைமைகளின் மாற்றங்களுக்கான பிரதிபலிப்பாக விற்பதற்கு இடமுள்ள பிணையங்களாகும்.

ஆரம்ப அளவீடுசெய்தலின் பின்னர் விற்பனைக்காக உள்ள நிதி முதலீடுகள் அடுத்தடுத்தாக நியாயமான பெறுமானத்திற்கு அளவீடு செய்யப்படும்.

தேறாத இலாபம் அல்லது நட்டம் விற்பனைக்காக நிலவுகின்ற உரிமைப்பங்குகளின்கீழ் (பிற விரிவான வருமானம்) இனங்காணப்படும். முதலீடுகள் விற்றொழிக்கப்படுகையில் உரிமைப்பங்குகளின்கீழ் அதனோடு தொடர்புடையதாக முன்னர் இனங்கண்ட இலாபம் அல்லது நட்டம் வருமானக் கூற்றில் “பிற தொழிற்பாட்டு வருமானம்” என்பதன்கீழ் இனங்காணப்படுகின்றது. கம்பெனியால் இணையான பிணையங்களில் ஒரு முதலீட்டினைவிட அதிகமாக வகிக்கின்ற சந்தர்ப்பங்களில் முதலில் கிடைத்து முதலில் விநியோகிக்கின்ற அடிப்படையில் விற்கப்பட உள்ளது. விற்பனைக்காக நிலவுகின்ற நிதி முதலீடுகள் மூலமாக ஈட்டப்படுகின்ற வட்டி வருமானம் விளைபயன்மிக்க வட்டி வீதத்தின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டு வட்டி வருமானத்தின்கீழ் வெளிப்படுத்தப்படுவதோடு பங்கிலாபம் பெறுவதற்கான உரிமை உறுதிசெய்யப்பட்ட பின்னர் வருமானக்கூற்றில் “பிற தொழிற்பாட்டு வருமானம்” என்பதன்கீழ் இனங்காணப்படுகின்றது. அத்தகைய முதலீடுகள் சேதஇழப்பீட்டின் பேரிலான நட்டங்கள் விபரமான வருமானக்கூற்றில் “நிதி முதலீடுகளின் பேரிலான சேதஇழப்பீட்டு நட்டங்களில்” இனங்காணப்படுவதோடு ‘விற்பனைக்காக நிலவுகின்ற ஒதுக்கத்திலிருந்து” நீக்கப்படும்.

விற்பனைக்காக உள்ள நிதிச்சொத்துக்களை குறுங்காலரீதியாக விற்பதற்குள்ள ஆற்றல் மற்றும் அபிலாசை தொடர்ந்தும் பொருத்தமானதா என்பதை விசாரிக்கும்பொருட்டு கம்பெனி விற்பதற்குள்ள தனது நிதிச்சொத்துக்களில் மதிப்பீடொன்றை மேற்கொள்கின்றது. இயங்காத சந்தை காரணமாக இந்த நிதிச் சொத்துக்களை விற்பனைசெய்ய கம்பெனிக்கு இயலாமல் போகின்ற வேளையிலும் விற்பதற்கான முகாமைத்துவத்தின் நோக்கம் முன்னுணரத்தக்க எதிர்காலத்தில் மாறுகின்றவிடத்து அரிதான சந்தர்ப்பத்திற்கேற்ற நிலைமைகளுக்குள் கம்பெனி இந்த நிதிச் சொத்துக்களை மீண்டும் வகைப்படுத்த இடமுண்டு. நிதிச் சொத்துக்கள் கடன் மற்றும் வருமதியானவற்றின் வரைவிலக்கணத்திற்கு பொருத்தமானவையாக அமையுமிடத்தும் பருவமுதிர்வுவரை இந்த சொத்துக்களை முன்னுணரத்தக்கஎதிர்காலத்தில் வைத்துக்கொள்வதற்கான அபிலாசையும் ஆற்றலும் கம்பெனிக்கு உள்ளவிடத்தும் கம்பெனிக்கு மேற்படி சொத்தினை அவ்வாறு வைத்துக்கொள்வதற்கான அபிலாசையும் ஆற்றலும் இருப்பின் மாத்திரம்கடன் மற்றும் வருமதிகளென மீண்டும் வகைப்படுத்தலை மேற்கொள்ள இயலும்.

விற்பனைக்காக மீள்வகைப்படுத்தலுக்கு உள்ளாக்கிய பின்னர் நிலவுகின்ற நிதிச்சொத்துக்காக உரிமைப்பங்குகளில் இனங்கண்ட மேற்படி சொத்துக்களுக்கு முன்னர் கிடைத்த நட்டம் அல்லது இலாபம் இருப்பின் அது விளைபயன்மிக்க வட்டி வீதத்தைப் பயன்படுத்தி முதலீட்டின் எஞ்சிய ஆயுட்காலத்திற்காக மதிப்பிறக்கம் செய்யப்படும். புதிய மதிப்பிறக்க கிரயத்திற்கும் எதிர்பார்த்த காசுப் பாய்வுக்கும் இடையிலான வித்தியாசமும் சொத்தின் எஞ்சிய ஆயுட்காலத்திற்காக விளைபயன்மிக்க வட்டி வீதத்தைப் பயன்படுத்தி மதிப்பிறக்கம் செய்யப்படும். பின்னர்சொத்து விற்றொழிக்கப்பட்டதாகஅவதானிக்கப்படின் உரிமைப்பங்குகளில்அறிவிக்கப்பட்ட அளவு மீள்வகைப்படுத்தபட்டு விபரமான வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படும்.

**1.3.5.3 ஏற்பிசைவிலிருந்து விலக்குதல்**

அ) சொத்திலிருந்து காசுப்பாய்வினை பெற்றுக்கொள்வதற்கான உரிமை காலாவதியானவிடத்து, அல்லது

ஆ) கம்பெனி சொத்திலிருந்து காசுப்பாய்வினை பெற்றுக்கொள்ளும் உரிமையை கையளித்துள்ள சந்தர்ப்பத்தில் அல்லது கிடைத்த காசுப்பாய்வினை எவ்விதமான தாமதமும் இன்றி மூன்றாந் தரப்பினருக்கு செலுத்துதல் “ஊடாக பயணஞ்செய்யும்” வேலைத்திட்டமொன்றில் ஒரு கடப்பாடாக பொறுப்பேற்றவிடத்து, மற்றும்

சொத்தின் அனைத்துவிதமான இடர்கள் மற்றும் வெகுமதிகள் கம்பெனியால் மாற்றப்பட்டு அல்லது சொத்தின் அனைத்துவிதமான இடர்களும்வெகுமதிகளும்கம்பெனிக்கு கையளிக்கப்பட்டுள்ளவிடத்து அல்லதுசொத்தின் அனைத்துவிதமான இடர்கள் மற்றும்வெகுமதிளைகம்பெனி பொருண்மைரீதியாககையேற்று அல்லதுதடுத்து வைத்திராதவிடத்து

நிதிச்சொத்து (அல்லது ஏற்புடைய இடங்களில் நிதிச்சொத்தின் ஒரு பகுதி அல்லது இணையான நிதிச்சொத்து தொகுதியின் ஒரு பகுதி) இனங்கண்ட நிலைமையில் ஏற்பிசைவிலிருந்து விலக்கிவைத்தல் இடம்பெறும்.

சொத்தொன்றின் காசுப்பாய்வினை பெற்றுக்கொள்ளும் உரிமையை கம்பெனி கையளித்து அல்லது “ஊடாக பயணம் செய்கின்ற” வேலைத்திட்டமொன்றில் பிரவேசித்துள்ளவிடத்து மற்றும் சொத்தின் அனைத்துவிதமான இடர்கள் மற்றும் வெகுமதிகளை பொருண்மைரீதியாக கையளித்து அல்லது தடுத்துவைத்து அல்லது அதன் நிர்வாகம் கையளிக்கப்பட்டிராதவிடத்து கம்பெனி சொத்தில் இடையறாமல் தொடர்புகொண்டுள்ள அளவுக்கு சொத்து ஏற்பிசைவு செய்யப்படும்.

கம்பெனி இணைப்பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் கம்பெனி தடுத்துவைத்துள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை சித்தரிக்கின்ற அடிப்படையில் கையளிக்கப்பட்ட சொத்தும் சார்ந்த பொறுப்பும் அளவீடு செய்யப்படும்.

கையளிக்கப்பட்ட சொத்து பற்றிய பிணையொன்றின் வடிவத்தை எடுக்கின்ற இடையறாத தொடர்பானது சொத்தின் ஆரம்ப கொண்டுசெல்லல் பெறுமதியிலும் கம்பெனி மீளச்செலுத்த அவசியமாகக்கூடிய பிரதிபலனின் உச்ச அளவில் ஆகக்குறைந்ததில் அளவீடு செய்யப்படும்.

**1.3.5.4 நிதிச்சொத்துக்கள் சேதஇழப்பு நட்டமடைதல்**

ஒவ்வோர் அறிக்கையிடல் காலப்பகுதி இறுதியிலும் நிதிச் சொத்து அல்லது நிதிச்சொத்துக் குழுமமொன்று சேதமடைவதற்கான பொருள்சார்ந்த சான்றுகள் உள்ளனவாவென கம்பெனி மதிப்பீடு செய்யும். சொத்துக்களின் ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் இடம்பெறுகின்ற தனி அல்லது பல சம்பவங்களின் (சேத சம்பவம்) பெறுபேறாக சேதமேற்பட்டுள்ளமைக்கான பொருள்சார்ந்தசான்றுகள் இருப்பின் மற்றும் மேற்படி சேதச் சம்பவம் அல்லது சம்பவங்கள் நிதிச் சொத்தில் அல்லது நிதிச் சொத்துக் குழுமத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்வுகளுக்கு நம்பிக்கைமிக்கவகையில் அளவிடக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தினால் மாத்திரமேநிதிச் சொத்து அல்லது நிதிச்சொத்துக் குழுமமொன்று சேதமடைந்து சேதநட்டத்தை ஏற்க நேரிடும். கடன்கொடுனர் அல்லது கடன்கொடுனர் குழுமமொன்று கணிசமான நிதி வசதியீனங்களை அனுபவிப்பதற்கான குறிப்பால் உணர்த்தல்கள் அவர்கள் வங்கிமுறிவுநிலைக்கு அல்லது வேறு நிதிசார் மறுசீரமைப்புக்கு வருவதற்கான நிகழ்தகவு மற்றும் தவறவிடுதல்களுடன் இடைத்தொடர்பு கொள்கின்ற நிலுவைப் பணத்தொகை மாற்றங்கள் அல்லது பொருளாதார நிலைமைகள் போன்ற மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வுகளில் அளவிடக்கூடிய வீழ்ச்சி உள்ளதாக அவதானிக்கக்கூடிய தரவுகளை சுட்டிக்காட்டுதல் போன்றவை சேதம் பற்றிய சான்றுகளில் உள்ளடங்கக்கூடும்.

**மதிப்பிறக்கம்செய்த கிரயத்தில் காட்டப்படுகின்ற நிதிச் சொத்துக்கள்**

மதிப்பிறக்கம்செய்த கிரயத்தில் காட்டுகின்ற நிதிச்சொத்துகளுக்காக தனியானவை என்றவகையில் முக்கியத்துவம் வகிக்கின்ற நிதிச் சொத்துக்கள் சம்பந்தமாக தனியான என்றவகையில் நிலவுகின்றதா அல்லது தனியான என்றவகையில் முக்கித்துவம் வகிக்காத நிதிச் சொத்துகளுக்காக கூட்டான சேதமடைதல் பற்றிய சான்றுகள் நிலவுகின்றனவா என்பதை நிர்ணயித்துக் கொள்வதற்காககம்பெனி முதலில் மதிப்பீடொன்றைச் செய்யும். முக்கியமானதாக அமையினும் அமையாவிடினும் தனியாக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிச்சொத்துக்காக சேதமடைவதற்கான பொருள்சார்ந்த சான்றுகள்நிலவுவதில்லையென கம்பெனி நிர்ணயித்தால்அந்த சொத்து இணையான கடன் இடர் பண்புகளைக்கொண்ட நிதிச் சொத்துக்கள் அணியில் உள்ளடக்கப்படுவதோடு சேதமடைதல் தொடர்பில் கூட்டாக மதிப்பீட்டுக்கு இலக்காக்கப்படும். சேதமடைதலுக்காக தனியாக மதிப்பீடு செய்யப்படுகின்ற சொத்துக்களும் சேதமடைதல் நட்டமும் இனங்காணப்படுகின்ற/இடையறாமல் நிலவுகின்ற சொத்துக்களும் கூட்டு சேதமடைதல் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட மாட்டாது.

சேதமடைதல் நட்டமொன்று இடம்பெற்றுள்ளமைக்கான பொருள்சார்ந்த சான்றுகள் இருப்பின் நட்டத்தின் அளவு சொத்தின் கொண்டுசெல்லல் பணத்தொகைக்கும் எதிர்கால காசுப்பாய்வுகளின் (உறப்பட நேரிட்டிராத எதிர்கால கடன் நட்டங்கள்) நடப்புப்பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாகவே அளவீடு செய்யப்படும். மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வுகள் நிதிச்சொத்தின் ஆரம்ப விளைபயன் வட்டி வீதத்திற்கு கழிவு வழங்கப்படும். ஏதேனும் கடனொன்றின் மாறுகின்ற கடன் வீதம் இருப்பின் ஏதேனும் சேதநட்டத்தை அளவீடு செய்வதற்கான கழிவு வீதமாக அமைவது உடன்படிக்கையின்கீழ் நிச்சயிக்கப்பட்டுள்ள நிகழ்காலத்தில் அமுலில் உள்ள வட்டி வீதமாகும்.

சொத்தொன்றின் கொண்டுசெல்லல் பணத்தொகை கொடுப்பனவுக் கணக்கொன்றைப் பாவிப்பதன் மூலமாக குறைக்கப்படுவதோடு நட்டத்தின் அளவு விரிவான வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். குறைக்கப்பட்ட கொண்டுசெல்லல் பணத்தொகையின் பேரில் இடையறாமல் வட்டி அட்டுறுநிலையடைவதோடு சேதஇழப்பு நட்டத்தை அளவிடும் பணிக்காக எதிர்கால காசுப்பாய்வுகளுக்கு கழிவுசெய்ய பிரயோகிக்கப்பட்ட வட்டி வீதத்தை பாவித்து அட்டுறுநிலை மேற்கொள்ளப்படும். வட்டி வருமானம் விரிவான வருமானக்கூற்றில் நிதி வருமானத்தின் ஒரு பகுதியாக அறிக்கையிடப்படும். எதிர்காலத்தில் மீள் அறவிட்டுக்கொள்ளும் யதார்த்தபூர்வமான எதிர்பார்ப்பு இல்லாதவிடத்தும் அனைத்துப் பிணைகளும் தேறியுள்ளவிடத்து அல்லது கம்பெனிக்கு கையளிக்கப்பட்டுள்ளவிடத்து கடனும் சார்ந்த கொடுப்பனவுகளும் பதிவழிக்கப்படும். அடுத்தடுத்த வருடத்தில்சேதஇழப்பினை இனங்கண்ட பின்னர்இடம்பெறுகின்ற ஒரு சம்பவம் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட சேதஇழப்பு நட்டத்தின் அளவு அதிகரித்தால் அல்லது குறைவடைந்தால் கொடுப்பனவுக் கணக்கு சீராக்கல்கள் மூலமாக முன்னர் ஏற்பிசைவுசெய்த சேதஇழப்பு நட்டம் அதிகரிக்கப்படும் அல்லது குறைக்கப்படும். எதிர்கால பதிவழித்தலொன்று பின்னர் அறவிடப்பட்டால் அத்தகைய அறவிடல் விபரமான வருமானக்கூற்றில் நிதிக்கிரயத்திற்கு வரவுவைக்கப்படும்.

**விற்பனைக்காக உள்ள நிதிச்சொத்துக்கள்**

விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்களுக்காகமுதலீடொன்று அல்லது முதலீட்டுத் தொகுதியொன்று சேதமடைந்துள்ளதா என்பது பற்றிய பொருள்சார்ந்த சான்றுகள் உள்ளனவா உறுதியாக அறிந்துகொள்வதற்காக ஒவ்வோர் அறிக்கையிடல் திகதியிலும் கம்பெனி மதிப்பீடொன்றைச் செய்யும். முதலீட்டின் நியாயமான பெறுமதி அதன் கிரயத்திற்கு குறைவாக கணிசமான அளவிலோ நீண்டகால ரீதியாக குறைவடைதல் விற்பனைக்காக உள்ளஉரிமைப்பங்கு முதலீடுகள் சம்பந்தமான பொருள்சார்ந்த சான்றாக அமையும். "கணிசமான" என்பது முதலீட்டின் ஆரம்ப கிரயத்திற்கு சார்புரீதியாக மதிப்பீடு செய்யப்படுவதோடு "நீண்டகால ரீதியில்" என்பது நியாயமான பெறுமதி அதன் ஆரம்ப கிரயத்திற்கு கீழாகஇருந்த காலத்திற்கு சார்புரீதியாக மதிப்பீடு செய்யப்படும். சேதஇழப்பு பற்றிய சான்றுகள் நிலவுகின்றவிடத்து விபரமான வருமானக்கூற்றில் ஏற்கெனவே இனங்கண்ட அந்த முதலீட்டில் ஏதேனும் சேதஇழப்பு நட்டம் கழிக்கப்பட்டு கைக்கொள்ளல் கிரயம் மற்றும் நடப்பு நியாயமான பெறுமதியாக அளவிடப்பட்ட திரண்ட கிரயம் ஏனைய விபரமான வருமானத்திலிருந்து நீக்கப்படுவதோடு விபரமான வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

விற்பனைக்காக உள்ளவையென வகைப்படுத்தப்பட்டுள்ள கடன் சாதனங்களை எடுத்துக்கொண்டால் மதிப்பிறக்கம்செய்த கிரயத்தில் காட்டப்பட்ட நிதிச்சொத்துகளுக்காக பிரயோகிக்கப்பட்ட மூலப்பிரமாணங்களை அடிப்படையாகக்கொண்டே சேதஇழப்பு மதிப்பீடு செய்யப்படும். எவ்வாறாயினும் சேதஇழப்புக்காக அறிக்கையிடப்பட்ட அளவு என்பது விபரமான வருமானக் கூற்றில் ஏற்கெனவே இனங்காணப்பட்ட அந்த முதலீட்டின் ஏதேனும் சேதஇழப்பு நட்டத்தைக் கழித்து மதிப்பிறக்கம்செய்த கிரயம் அல்லது நடப்பு நியாயமான பெறுமதிக்கிடையிலான வித்தியாசமாக அளவிடப்படும்.

சேதஇழப்பு நட்டத்தை அளவிடுகின்ற பணிக்காக எதிர்கால காசுப்பாய்வினைக் கழிவுசெய்ய பிரயோகிக்கப்பட்ட வட்டி வீதத்தை பாவித்து சொத்திலிருந்து குறைக்கப்பட்ட கொண்டுசெல்லல் பெறுமதியின் அடிப்படையில் எதிர்கால வட்டி வருமானம் நிதி வருமானத்தில் இடையறாமல் அட்டுறுநிலையடையும். வட்டி வருமானம் நிதி வருமானத்தின் ஒரு பகுதியாக குறிக்கப்படும். அடுத்தடுத்த வருடத்தில் கடன்சாதனப் பத்திரமொன்றில் நியாயமான பெறுமதி அதிகரித்தால் அத்துடன் அந்த அதிகரிப்பு விபரமான வருமானக் கூற்றில் சேதஇழப்பு நட்டம் இனங்காணப்பட்ட பின்னர் இடம்பெறுகின்ற சம்பவத்திற்கு பொருள்ரீதியான தொடர்பு இருப்பின் விபரமான வருமானக்கூற்று ஊடாக சேதஇழப்பு நட்டம்எதிர்மறையாக்கப்படும்.

**1.3.6 நிதிப் பொறுப்புகள்**

கம்பெனி தனது நிதிச்சொத்துக்களில் உசிதமானவகையில் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு காட்டப்படுகின்ற நிதிப் பொறுப்புக்களாக அல்லது ஏனைய நிதிப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படும். அறிக்கையிடல் திகதியில் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதியில் காட்டப்படுகின்ற நிதிப் பொறுப்புகள் இருக்கவில்லை.

**1.3.6.1 அடிப்படை ஏற்பிசைவும் அளவீடு செய்தலும்**

அனைத்து நிதிப் பொறுப்புகளும் தொடக்கத்தில் நியாயமான பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படும். நேரடியாக உடைமையாக்கத்தக்கொடுக்கல் வாங்கல் கிரயம் இதில் அடங்கும். கம்பெனியின் நிதிப் பொறுப்புகளில் கடனும் கடனெடுத்தல்களும் வர்த்தக மற்றும் பிற சென்மதியான பணமும் வங்கி மேலதிகப்பற்றும் அடங்கும்.

**1.3.6.2 அடுத்தடுத்த அளவீடு செய்தல்**

நிதிப் பொறுப்புகளில் அடுத்தடுத்த அளவீடு மேற்படி சொத்துக்களின்
வகைப்படுத்தலின்பேரில் கீழே காட்டப்பட்டவாறு இடம்பெறும்.

**(அ) இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமானம்கொண்ட நிதிச் சொத்துக்கள்**

இலாபம் அல்லது நட்டங்கள் ஊடாக நியாயமான பெறுமதிகொண்ட நிதிப் பொறுப்புகளுக்கு விற்பனை செய்வதற்காக வைத்துக்கொண்ட நிதிப் பொறுப்புகள் மற்றும் இலாபம், நட்டங்கள் மூலமாக தொடக்கத்தில் நியாயமான பெறுமதியில் இனங்கண்ட நிதிப் பொறுப்புக்கள் இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயமான பெறுமதிக்கு தொடக்கத்திலேயே இனங்காணலின்பேரில் நிமித்தமாகக் கொள்ளப்பட்ட நிதிப்பொறுப்புகள் அடங்கும்.விற்பனைக்காக அல்லது குறுகிய எதிர்காலத்தில் மீண்டும் கொள்வனவு செய்வதற்காக கைக்கொள்ளப்பட்ட நிதிப்பொறுப்புகள் விற்பனைக்காக வைத்துக்கொண்ட நிதிப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படும்.

**(ஆ) பிற நிதிப் பொறுப்புகள்**

ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் ஏனைய நிதிச்சொத்துக்கள் விளைபயன்மிக்க வட்டிவீத முறையியலைப் பாவித்து மதிப்பிறக்கம்செய்த கிரயத்தில் அடுத்தடுத்தாக அளவீடு செய்யப்படும். பொறுப்பினை ஏற்பிசைவுசெய்தல் ஒதுக்கப்பட்டவிடத்து போன்றேநிதிச்சொத்துக்கள் விளைபயன்மிக்க வட்டிவீத முறையியல் ஊடாகவும் விபரமான வருமானக்கூற்றில் இலாபமும் நட்டமும் ஏற்பிசைவு செய்யப்படும். கைக்கொள்ளல் ஏதேனும் கழிவு, பரிசூதியம் மற்றும் விளைபயன்மிக்க வட்டிவீதத்தின் உள்ளார்ந்த பகுதியாக அமைகின்ற கட்டணங்கள் அல்லது கிரயத்தை கவனத்திற்கொண்டு மதிப்பிறக்கம்செய்த கிரயம் கணிப்பீடு செய்யப்படும்.

**1.3.6.3 ஏற்பிசைவினை விலக்குதல்**

பொறுப்பின் கீழான கடப்பாட்டினை ஈடேற்றியவிடத்து அல்லது செல்லுபடியற்றதாக்கியவிடத்து அல்லது காலாவதியாகியவிடத்து நிதிச் சொத்துக்களின் ஏற்பிசைவு விலக்கப்படும். நிலவுகின்ற நிதிப்பொறுப்பு பொருண்மைரீதியாக மாறுபட்ட நிபந்தனையின்கீழ் மேற்படி கடன் வழங்குபவரின் வேறு நிதிப் பொறுப்பில் மீள்நிறுவப்பட்டவிடத்து அல்லது நிலவுகின்ற நிதிப்பொறுப்பு பொருண்மைரீதியாகமாற்றப்பட்டவிடத்து அத்தகைய பரிமாற்றல் அல்லது மாற்றல் ஆரம்ப பொறுப்பினை புறந்தள்ளல் மற்றும் புதிய பொறுப்பினை ஏற்றுக்கொள்ளலாக கருதப்படுவதோடு கொண்டுசெல்லல் பெறுமதிகளில் சம்பந்தப்பட்ட மாற்றம் விபரமான வருமானக்ககூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**1.3.6.4 நிதிச்சாதனங்களை எதிரீடுசெய்தல்**

இனங்கண்ட அளவுகளை எதிரீடுசெய்ய நிகழ்காலத்தில் அமுலாக்கக்கூடிய சட்பூர்வமான உரிமை இருப்பின் மற்றும் நிகர அடிப்படையில் தீர்ப்பதற்கான விருப்பம் அல்லது சொத்துக்களைப் பெற்றுக்கொள்ள மற்றும் ஒரேயடியாக பொறுப்புக்களை தீர்க்க விருப்பம் இருப்பின் மாத்திரம் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் எதிரீடு செய்யப்பட்டு நிகர அளவு நிதி நிலைமை பற்றிய கூற்றில் அறிக்கையிடப்படும்.

**1.3.7 சரக்குத் தொக்குகள் ( கையிருப்புகள்)**

காலங்கடந்த மற்றும் மெதுவாக விற்பனையாகின்ற வகையினங்களுக்கு உரிய அநுகூலங்களை வழங்கியபின்னர் கிரயம் மற்றும் நிகர தேறிய பெறுமானத்தில் ஆகக்குறைந்த பெறுமானத்திற்கு சரக்குத் தொக்குகள் அளவீடு செய்யப்படும். நிகர தேறிய பெறுமானம் என்பது பொதுவான தொழில்முயற்சி நடவடிக்கைகளில் பூரணமாக்குவதற்கான மதிப்பீடுசெய்த கிரயம் மற்றும் விற்பனையை மேற்கொள்ள அவசியமான மதிப்பீடுசெய்த கிரயத்தைக் கழித்து சரக்குத் தொக்குகளை விற்பனை செய்யக்கூடிய விலையாகும்.

சரக்குத் தொக்குகளை அவை நிகழ்காலத்தில் இடத்திற்கு அல்லது நிலைமைக்கு கொண்டுவருவதற்காக உற்பட்ட கிரயம் கீழே காட்டப்பட்ட சூத்திரத்தை பாவித்து கணக்குப்பதியப்படும்.

மூலப் பொருட்கள் - நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட கிரயத்தில்

முடிவுப் பொருட்கள் - நேரடிப் பொருட்கள், நேரடி உழைப்பு கிரயத்திலும் சராசரி தொழிற்பாட்டு கொள்திறனில் நிலையான உற்பத்திகள் பொதுப் பணிக்கிரயத்திலும் தீர்மானிக்கப்பட்ட பொருத்தமான விகிதாசாரத்திற்கு

முற்றுப்பெறாத வேலைகள் - உள்ளீட்டுப் பொருட்களின் கிரயத்தில்

பொதியிடல் பொருட்கள்- நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட கிரயத்தில்

பிற கையிருப்புகள் - நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட கிரயத்தில்

இடைப்போக்கிலுள்ள பண்டங்கள் - மெய்க் கிரயத்தில்

**1.3.8 வர்த்தக மற்றும் பிற வருமதிகள்**

வர்த்தக வருமதிகள் தொடக்கத்தில் நியாயமான பெறுமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு அதன்பின்னர் அவற்றின் சேதஇழப்புக்கான ஏற்பாடுகள் கழிக்கப்பட்ட பின்னர் விளைபயன்மிக்க வட்டி முறையியலைப் பயன்படுத்தி மதிப்பிறக்கம்செய்த கிரயத்தில் அளவீடு செய்யப்படும்.

ஏனைய வருமதிகள் சேத இழப்பீட்டுக்கான ஏற்பாடுகளைக் கழித்து அவற்றைத் தேறவைக்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அளவுகளுக்கு இனங்காணப்படும். ஏற்பாடுகளின் அளவுகள் விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்படும். எவ்வாறாயினும் கம்பெனியுடன் தொடர்புடைய தவிர்க்க இயலாத ஏதுக்கள் காரணமாக பதவியணி கடன் மதிப்பிறக்க கிரயத்தின்பேரில் அளவீடு செய்யப்படுவதில்லை.

**1.3.9 காசும் காசுக்கு சமமானவையும்**

காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் கையிலுள்ள காசு, அழைப்பு வைப்புகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ள வைப்புகள், முதலில் மூன்றுமாத பருவமுதிர்வுகொண்ட ஏனைய குறுங்கால உயர் திரவத்தன்மைகொண்ட முதலீடுகள் அடங்கும். வங்கி மேலதிகப்பற்று நிதி நிலைமை பற்றிய கூற்றில் நடைமுறைப் பொறுப்பில் காட்டப்படும்.

**1.3.10 வெளிப்படுத்திய மூலதனம்**

**(அ) வகைப்படுத்தல்**

காசு மற்றும் ஏனைய சொத்துக்களை கையளிப்பதற்கான கடப்பாடற்றவிடத்து தற்றுணிவுவாய்ந்த பங்கிலாபத்தைக்கொண்ட சாதாரண பங்குகள் உரிமைப் பங்குகளாக வகைப்படுத்தப்படும்.

**(ஆ) பங்கிலாபம்**

பங்கிலாபம் பெறுவதற்கான உரிமையை பங்குரிமையாளர்களுக்கு நிலைநாட்டியவிடத்து பங்கிலாபம் ஏற்பிசைவு செய்யப்படும். உரிமைப்பங்குகளின் பங்குரிமையாளர்களுக்கான துணைப் பங்கிலாபம் பணிப்பாளர்சபையினால் வெளிப்படுத்தப்படும். பங்குரிமையாளர்களால் வருடாந்த பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டவிடத்தே இறுதிப் பங்கிலாபம் செலுத்தப்படும்.

**1.3.11 வர்த்தக மற்றும் பிறசென்மதிகள்**

பொதுவான தொழில்முயற்சி அலுவல்களில் பெற்றுக்காண்ட சேவைகளுக்காக செலுத்தவேண்டிய கடப்பாடுகள் வர்த்தக சென்மதிகளாகும். ஒரு வருடம் அல்லது அதனைப் பார்க்கிலும் குறைந்த காலப்பகுதிக்குள் செலுத்துதல் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனில் அவை நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படல் வேண்டுமென்பதோடு அவ்வாறின்றேல் அவை நடைமுறையல்லாத பொறுப்புக்களாக முன்வைக்கப்படும்.

தொடக்கத்தில் நியாயமான பெறுமானத்தின்பேரில் வர்த்தக சென்மதிகள் இனங்காணப்படுதோடு பின்னர் விளைபயன்மிக்க வட்டி வீதத்தைப் பிரயோகித்து மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்தில் அளவிடப்படும். கழிவுசெய்தலின் தாக்கம் முக்கியமற்றதென்பதால் வெளிப்படுத்தப்பட்ட வட்டி வீதமற்ற குறுங்கால சென்மதிகள் தொடக்கத்தில் இன்வொயிஸ்செய்த அளவுக்கு அளவீடு செய்யப்படும்.

**1.3.12 கொடைகளும் மானியங்களும்**

படிப்படியான அடிப்படையில் சேத இழப்பீட்டினைச்செய்ய கருதப்படுகின்ற துணைநிலை கிரயத்துடன் சீராக்க அவசியமான காலப்பகுதி பூராவிலும் கொடைகளும் மானியங்களும் விபரமான வருமானக் கூற்றில் வரவுவைக்கப்படும்.

நியாயமான பெறுமானத்திற்குள்ள நிதியல்லாத கொடைளை உள்ளிட்டசொத்துக்களைச் சார்ந்த கொடைகள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் பிற்போடப்படுவதோடு துணைநிலை சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் பூராவிலும் விபரமான வருமானக் கூற்றில் வரவு வைக்கப்படும்.

வருமானம் சார்ந்த கொடைகள் அவை கிடைக்கவேண்டிய காலப்பகுதிக்குள் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**1.3.13 நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரி வருமானம்**

**அ) நடப்புவரி**

நடப்பு மற்றும் முந்திய காலப்பகுதிக்காக நடப்பு வருமான வரிச்சொத்துக்களும் பொறுப்புக்களும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அறவிட அல்லது செலுத்த எதிர்பார்க்கின்ற அளவில் அளவீடு செய்யப்படும்.

நிதிக்கூற்றுகளில் அறிக்கை செய்யப்பட்டுள்ளவாறு வருமான வரிக்கான ஏற்பாடுகள் வருமானம் மற்றும் செலவின அடிப்படைக் கொள்கைகளையே ஆதாரமாகக் கொண்டுள்ளதோடு 2006 இன் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டத்தினதும் அதன்மீதான அடுத்தடுத்த திருத்தங்களினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் கணிப்பிடப்பட்டுள்ளது.

**ஆ) பிற்போடப்பட்ட வரிவிதிப்பு**

பொறுப்புக்கள் முறையியலைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரியானது நிதி அறிக்கையிடல் பணிகள் வரி அலுவல்களுக்காக பாவிக்கப்படுகின்ற அளவுகளுக்காக சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்கும் இடையிலான கொண்டுசெல்லல் அளவுகளில் தற்காலிக மாற்றங்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டே கணிக்கப்பட்டுள்ளது.

அனைத்துவிதமான தற்காலிக மாற்றங்களுக்காகவும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஏற்பிசைவு செய்யப்படும். அனைத்து குறைக்கப்படக்கூடிய தற்காலிக மாற்றங்களையும் பாவனையற்ற வரிக் கடன் மற்றும் பாவனையற்ற வரி நட்டங்களையும் முன்கொண்டு செல்லல் பாவனைக்கு எடுக்கக் கூடிய வரி அறவிடக்கூடிய இலாபம் இருப்பதற்கான ஆற்றலுள்ள அளவுக்கு குறைக்கப்படக்கூடிய அனைத்து தற்காலிக மாற்றங்களையும் பாவனையற்ற வரிக் கடன் மற்றும் பாவனையற்ற வரி நட்டங்களையும் முன்கொண்டுசெல்வதற்கான பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படும்.

பிற்போடப்பட்ட வரிகளின் நிகர கொண்டுசெல்லல் அளவு ஒவ்வொரு நிதிநிலைமை பற்றிய கூற்றின் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதோடு பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் அனைத்தையும் அல்லது ஒரு பகுதியை பாவனைக்கு எடுப்பதற்காக இடமளிக்கும் பொருட்டு வரி அறவிடப்படக்கூடிய போதியளவிலான இலாபம் நிலவுதல் தொடர்ந்தும் நிகழ இயலாத அளவுக்கு குறைக்கப்படும்.

நிதிநிலைமை பற்றிய கூற்றின் திகதியன்று விதிக்கப்பட்டுள்ள அல்லது தனிநிலையானதாக விதிக்கப்பட்டுள்ள வரிவீதங்கள் மற்றும் வரிச்சட்டங்களின் அடிப்படையில் சொத்து தேறிய அல்லது பொறுப்பு தீர்க்கப்பட்ட ஆண்டுக்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட எதிர்பார்க்கின்ற வரி வீதங்களுக்கிணங்க பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்களும் பொறுப்புக்களும் கணிப்பீடு செய்யப்படும்.

உரிமைப்பங்குகளில் நேரடியாக இனங்காணப்பட்டுள்ள வகையினங்கள் துணைநிலை வருமானவரி உரிமைப் பங்குகளில் ஏற்பிசைவு செய்யப்படும்.

நடப்பு வரிச்சொத்துக்களையும் பொறுப்புக்களையும் எதிரீடு செய்யும்பொருட்டு சட்டரீதியாக அமுலாக்கவேண்டிய உரித்துவம் இருப்பின் மற்றும் மேற்படி வரி அறவிடக்கூடிய நிறுவனத்திற்கு மேற்படி வரி அதிகாரிகளாலேயே அறவிடப்படுகின்ற வருமான வரிகளுக்கு அவை ஏற்புடையனவாயின் பிற்போடப்பட்ட வரி வருமானமும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படும்.

### 1.3.14 துணைநிலை தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

பிறிதொரு தரப்பினரின் நிதி அல்லது தொழிற்பாட்டுக் கொள்கைகள் / தீர்மானங்களை கட்டுப்படுத்த அல்லது கணிசமான அழுத்தம் கொடுக்க ஒரு தரப்பினருக்கு ஆற்றல் உள்ளவிடத்து விலையொன்றைச் செலுத்துவதா இல்லையா என்பதை பொருட்படுத்தாமல் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய அனைத்துவிதமான வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்படும். தாய்க் கம்பெனிக்கும் நிர்வகிக்கப்படுகின்ற கம்பெனிகளுக்கும் இடையில் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றதா இல்லையா என்பதை பொருட்படுத்தாமல் அந்த துணைநிலை தரப்பினர்களுடனான உறவு வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

### 1.3.15 ஊழியர் நன்மைகள்

**(அ) குறித்தரைத்த நன்மைத் திட்டங்கள் – இளைப்பாற்றுப் பணிக்கொடை**

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த பொறுப்புகளுக்காக வெளியிலிருந்து ஏற்பாடுகள் செய்யப்படுவதில்லை. மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீடு பணிக்கொடை பொறுப்புகளுக்கான அடிப்படையாக அமையும். ஆயுட்கணிப்பு இலாபம் அல்லது நட்டம் அவை தோன்றிய காலஎல்லையில் வேறு விபரமான வருமானக் கூற்றுக்கு செலவுச்சுமையாக அமையமாட்டாதெனில் வரவுவைக்கப்படும்.

கம்பெனியின் ஆயுட்கணிப்பு மதிப்பீடு எக்சூரியல் அன்ட் மேனேஜ்மன்ற் கன்சல்டன்ற் (பிரை) கம்பெனியால் மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆயுட்கணிப்பு மதிப்பீடு, கழிவு வீதங்கள் மற்றும் எதிர்கால சம்பள ஏற்றம் பற்றிய ஊகங்களை மேற்கொள்ளலுடன் தொடர்புடையது. இந்த மதிப்பீட்டின்போதுமதிப்பீட்டின் சிக்கலான தன்மை, அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் அவற்றின் நீண்டகால இயல்பு, குறித்துரைத்த நன்மைகள் கடப்பாடுகளின் மாற்றங்களுடன் மிகவும் கூருணர்வு மிக்கவையாகும். அனைத்து ஊகங்களும் ஒவ்வோர் அறிக்கையிடல் தினத்திலும் மீளாய்வு செய்யப்படும். மதிப்பீட்டின்போது பாவித்த பிரதான ஊகங்கள் பற்றிய விபரங்கள் 22 வது குறிப்பில் காட்டப்பட்டுள்ளன. இறப்புவீதம், பலவீன வீதம் மற்றும் மீளப்பெறல் வீதம் என்பவையே பாவித்த பிரதான ஊகங்களாகும். ஓய்வூதியத் திட்டத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்ற வேகத்தை நிர்ணயிக்கையில் கழிவு வீதம் மற்றும் சம்பள வீதம் பற்றிய ஊகங்கள் தீர்வுக்கட்டமான முக்கியத்துவம் வகிக்கின்றன.

**(ஆ) குறித்துரைத்த பங்களிப்புத் திட்டங்கள் – ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்**

ஏற்புடைய நியதிச்சட்டங்கள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம்ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புத்தொகைகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்புக்காக ஊழியர்கள் உரிமைபெறுவர். கம்பெனி ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் 12% மற்றும் 3% ஐ ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக முறையே பங்களிப்பு செய்கின்றது.

**1.3.16 ஏற்பாடுகள்**

இறந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக நடப்பு சட்டமுறையான மற்றும் உடன்பாடுசார்ந்த கடப்பாட்டினை சபை கொண்டுள்ளவிடத்து அந்த கடப்பாடுகளை தீர்த்தலுக்காகபொருளாதார நன்மைகளை எதிர்விளைவாக வழங்கி மற்றும் வளங்கள் பாய்ந்துவருதல் அவசியமாதல் இடம்பெறக்கூடியவிடத்தும் கடப்பாட்டின் பெறுமதிக்கு நம்பகத்தன்மைமிக்க மதிப்பீடொன்றினை மேற்கொள்ள இயலுமாகின்றவிடத்தும் ஏற்பாடுகள் இனங்காணப்படும்.

ஒன்றுக்கு இணையான பல கடப்பாடுகள் உள்ளவிடத்து கடப்பாட்டு வகுப்பினை ஒட்டுமொத்தமாக கருத்திற்கொள்வதன் மூலமாக அவற்றைத் தீர்ப்பதற்காக காசு பாய்ந்து செல்வதை அவசியப்படுத்துதல் பற்றிய இறப்பு வீதம் நிர்ணயிக்கப்படும். இணையான கடப்பாட்டு வகுப்பொன்றில் அடக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு வகையினத்திற்கு ஏற்புடைய பணம் பாய்ந்து செல்வதற்கான கடப்பாடு சிறியதாகவிருப்பினும் ஏற்பாடு ஏற்பிசைவு செய்யப்படும்.

**1.3.17 கடப்பாடுகள்**

அறிக்கையிடல் திகதியளவில் நிலவிய பொருள்ரீதியான கடப்பாடுகள் யாவும் இனங்காணப்பட்டுள்ளதோடு அவை நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**1.3.18 வருமானத்தை ஏற்பிசைவுசெய்தல்**

கம்பெனி பொதுவான தொழில்முயற்சி செயற்பாடுகளில் வழங்கிய சேவைகளுக்காக கிடைத்த அல்லது வருமதியான பிரதிபலனின் நியாயமான பெறுமதியினை வருமானம் உள்ளடக்குகின்றது. தரகர் கட்டணங்கள், விற்பனைச் செலவுகள் மற்றும் புறள்வுடன் தொடர்புடைய ஏனைய வரிகள் கழிக்கப்பட்டு இன்வொயிஸ் தயாரிக்கப்பட்ட பெறுமதிக்கு வருமானம் அறிக்கையிடப்படும்.

**(அ) பண்டங்கள் விற்பனை**

பொருளாதார நன்மைகள் சபைக்கு பாய்ந்துவர இடமுள்ள அளவுக்கும் உறப்பட்ட வருமானம் மற்றும் சார்ந்த கிரயத்தை நம்பகத்தன்மைமிக்க வகையில் அளவிடக்கூடிய அளவுக்கு வருமானம் இனங்காணப்படும்.வர்த்தக கழிவுகளும் விற்பனை வரிகளும் கழிக்கப்பட்டு கிடைத்த அல்லது வருமதியான பிரதிபலனின் நியாயமான பெறுமதிக்கு வருமானம் அளவீடு செய்யப்படும்.உரித்துவத்தின் கணிசமான இடர்களும் நன்மைகளும் கொள்வனவாளர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளவிடத்தும் பிரதிபலனை மீண்டும் அறவிட்டுக்கொள்ளல் இடம்பெறக்கூடியவிடத்தும் பண்டங்கள் சார்ந்த கிரயத்தையும்தோன்றக்கூடிய இலாபத்தையும் நம்பகத்தன்மைமிக்கதாக அளவீடு செய்யக்கூடியவிடத்தும் வருமானம் இனங்காணப்படும்.

**(ஆ) வட்டி வருமானம்**

விளைபயன்மிக்க வட்டி முறையியல் பிரயோகிக்கப்பட்டு வட்டி வருமானம் இனங்காணப்படும்.

**(இ) பங்கிலாப வருமானம்**

செலுத்துலை பெறுவதற்கான உரிமை உறுதியானவிடத்து பங்கிலாப வருமானம் இனங்காணப்படும்.

**(ஈ) பிற வருமானம்**

ஏனைய வருமானம் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**1.3.19 செலவுகள்**

வருமானம் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும். தொழில்முயற்சியின் அன்றாட பணிகளை பேணிவரவும் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளை வினைத்திறன்மிக்கதாக பேணிவரும் பொருட்டும் உறப்பட்ட அனைத்துச் செலவுகளும் ஆண்டுக்கான இலாபத்தை நோக்கி வருகையில் வருமானத்திற்கு அறவிடப்பட்டுள்ளது.

விபரமான வருமானக் கூற்று தகவல்களை சமர்ப்பிக்கும் பணிக்கானசெலவு வகைப்படுத்தலின் பொருட்டு செலவு நடைமுறை முறையியலில் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

**1. வெளியிடப்பட்டபோதிலும் இற்றைவரை அமுலாக்கப்படாத இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களின் தாக்கம்**

கம்பெனியின் நிதிக்கூற்றுகள் வெளியிடப்பட்ட திகதி வரை வெளியிடப்பட்டுள்ள எனினும் இற்றைவரை அமுலாக்கப்படாத தரநியமங்கள் மற்றும் பொருள்கோடல்கள் கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவை அமுலாக்கப்பட்டவிடத்து ஏற்புடையதாக்கிக்கொள்ள வேண்டுமாயின் மேற்படி தரநியமங்களை பிரயோகிக்க கம்பெனி கருதியுள்ளது.

**i. இ.நி.அ.நி. 9 - நிதிச்சாதனங்கள்**

**SLFRS 9**மூலமாக **LKAS 39** மின்நிறுவப்படுவதோடு வகைப்படுத்தல் மற்றும் அளவீடு செய்தல்,சேதஇழப்பு, நிதிச்சொத்துக்கள், பொறுப்புக்களின் சேதஇழப்பு மற்றும் தளம்பல் காப்பு கணக்கீட்டுடன் தொடர்புடையது.

**SLFRS 9**கீழ்க்காணும் வகையில் மாற்றப்படும்.

- இலாபம் மற்றும் நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு அளவீடு செய்யப்படாத அனைத்து நிதிச்சொத்துகளுக்காகவும் புதிய சேத இழப்பு அவசியப்பாடுகள்
- நிதிச் சொத்துகளுக்காக முன்பிருந்தே இறுதிக்கு கொண்டுவரப்பட்ட வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டு அவசியப்பாடுகளிலான திருத்தங்கள்

**SLFRS 9**இன் கீழ் கடன் நிகழ்வொன்று தொடர்ந்து கடன் நட்டத்தை ஏற்பிசைவுசெய்ய முன்னர் இடம்பெறுவது அவசியமற்றதென்பதால் சேதஇழப்பு எடுத்துக்காட்டானது மிகுந்த “தூர நோக்கு” கொண்ட எடுத்துக்காட்டாகும். ஏனைய விரிவான வருமானங்கள் ஊடாக மதிப்பிறக்கம்செய்த கிரயத்தில் அல்லது நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்ற நிறுவனமொன்று தற்போது எல்லாவேளைகளிலும் (குறைந்த பட்சம்) 12 மாதங்களுக்காக எதிர்பார்த்த இலாபம் அல்லது நட்டத்தை இனங்காணும். ஆரம்ப ஏற்பிசைவுக்குப் பின்னர் கடன் இடரில் கணிசமான அதிகரிப்பு நிலவுகின்றவிடத்து இந்த சொத்தின்மீதான ஆயுட்காலம் பூராவிலும் எதிர்பார்த்த நட்டம் இனங்காணப்படும்.

ஏனைய மாற்றங்களில் SLFRS 9வெறுமனேஆரம்பக் கடன்தொகை மற்றும் வட்டியைச் செலுத்துவதற்கான செலுத்துதல்களை ஏற்படுத்துவதாக கருதப்படுகின்ற நிதிச்சொத்தொன்றின் உடன்படிக்கை செய்யப்பட்ட காசுப் பாய்வுக்கான அவசியப்பாடுகளை தெளிவுபடுத்துகின்ற மேலதிக உள்ளீடுகளின் வழிகாட்டிகளையும் அறிமுகஞ் செய்கின்றது.

ஏனைய விபரமான வருமானம் ஊடாக நியாயமான பெறுமானமாக கடன் சாதனத்திற்காக மூன்றாம் அளவீட்டுத் தொகுதியொன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. வெறுமனே ஆரம்பக் கடன்தொகையையும்வட்டியையும் செலுத்துவதற்கான செலுத்தல்கள் உடன்படிக்கை செய்யப்பட்ட காசுப் பாய்வுக்கான பண்புசார் பரிசோதனையை நிறைவுசெய்கின்றவிடத்தும் நிறுவனம் உடன்படிக்கை செய்யப்பட்ட காசுப்பாய்வினை சேகரித்தல் மற்றும் நிதிச்சொத்துக்களை விற்பனைசெய்தல் ஆகிய இரண்டுக்காகவும் நிதிச்சாதனங்களை தடுத்துவைத்துள்ளவிடத்தும் அது ஏற்புடையதாகும்.

இந்த தரநியமம் 2018 சனவரி 01 ஆந் திகதியில் அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற நிதிக்கால எல்லைக்காக வலுவில் இருக்கும்.

SLFRS 9முதல்த்தடவையாக பிரயோகித்தலானது நிதிச் சாதனங்களுக்கான கணக்கீட்டின்பேரில் விரிவானதும் ஆற்றல்மிக்கதுமானமிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும். கடனும் முற்பணமும், வருமதியான குத்தகை வாடகை, வாடகைக் கொள்வனவு மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதிக்கு அளவீடு செய்யப்படாத ஏனைய நிதிச் சாதனங்களுக்காக புதிய சேதஇழப்பு அவசியப்பாடுகள் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும்.

இந்த தரநியமத்தின் தாக்கம் பற்றிய விபரமான மதிப்பீடொன்றினை கம்பெனி

இற்றைவரை மேற்கொள்ளவில்லை.

**ii)** SLFRS 15 –வாடிக்கையாளர்களுடனான உடன்படிக்கைகளிலிருந்து வருமானம்

–வலுவுக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு வாக்குறுதியளித்த பண்டங்கள் அல்லது சேவைகள் கையளிக்கப்படுதலை சித்தரிக்கும் பொருட்டு மேற்படி பண்டங்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்திற்காக நிறுவனம் உரித்துரிமைபெற எதிர்பார்க்கின்ற பிரதிபலன் பிரதிபலிக்கத்தக்க அளவுக்கு நிறுவனமொன்று வருமானத்தை ஏற்பிசைவு செய்யும். இதன் கருத்து யாதெனில் 'LKAS 18' வருமானத்தின்கீழ் நிகழ்காலத்தில் நிலவுகின்ற இடர்களையும் வெகுமதியைகையளிப்பதைப் பார்க்கிலும் பண்டங்கள் அல்லது சேவைகளின் கட்டுப்பாடு கையளிக்கப்பட்டவிடத்து வருமானத்தை ஏற்பிசைவு செய்வதாகும்.

இதனை ஈடேற்றுவதற்காக SLFRS 15ஐந்து படிமுறைளைக்கொண்ட முன்மாதிரியை

பிரயோகித்தல் தேவைப்படுத்தப்படுகின்றது.

1. உடன்படிக்கையை இனங்காணல்
2. செயலாற்றுகை கடப்பாடுகளை இனங்காணல்
3. கொடுக்கல் வாங்கல் விலைகளை நிர்ணயித்தல்
4. ஒவ்வொரு செயலாற்றுகை கடப்பாட்டுக்காகவும் கொடுக்கல் வாங்கல் விலையொன்றினை ஒதுக்குதல்.
5. ஒவ்வொரு செயலாற்றுகை கடப்பாட்டினையும் நிறைவேற்றியவிடத்து வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்

இந்த தரநியமம் 2018 சனவரி 01 ஆந் திகதியில் அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற நிதிக்கால எல்லைக்காக வலுவில் இருக்கும்.

இந்த தரநியமத்தின் தாக்கம் பற்றிய விபரமான மதிப்பீடொன்றினை கம்பெனி

இற்றைவரை மேற்கொள்ளவில்லை.

**iii)** கீழே காட்டப்படுகின்ற புதிய கணக்கீட்டு தரநியமங்கள் மற்றும் நிலவுகின்ற தரநியமங்களுக்காக திருத்தப்பட்ட நிதிக்கூற்றுகளின்பேரில் தாக்கமேற்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதில்லை.

விவசாயம்: விளைவுதரும்செடிகள்( ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி பற்றிய LKAS 16மற்றும் "விவசாயம்" பற்றிய LKAS 41இற்கான திருத்தங்கள்)

ஒழுங்குறுத்தல் பிற்போடல் சொத்துக்கள் - SLFRS 14திகதி 2016 சனவரி 01

| | | 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது | 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற 9 மாத கால எல்லைக்கானது |
|---|---|---|---|
| 3. | வருமானம் | ரூ. | ரூ. |
| | மொத்த விற்பனைகள் | 7,739,513,356 | 5,742,470,452 |
| | கழிக்க -தேசத்தைக் கட்டிழுப்புதல் வரி | (154,785,579) | (114,849,792) |
| | | 7,584,727,777 | 5,627,620,660 |
| 4. | ஏனைய வருமானம் | | |
| | கழிமிகையான விற்பனை | 481,018 | 572,564 |
| | வாடகை வருமானம் | 61,359 | - |
| | வழங்குநர்களைப் பதிவுசெய்தல் | 3,552,000 | - |
| | பாவனைசெய்ய இயலாத வகையினை விற்பனை | | - |
| | அபராதமும் மிகைவிதிப்பும் | 533,549 | 1,654,058 |
| | அரசாங்கக் கொடை | 93,527,650 | 154,920,972 |
| | கேள்விகள் பதிவுசெய்தல் கட்டணங்கள் | - | 427,100 |
| | மீளளிக்கப்படாத கேள்விகள் வைப்பு | 645,000 | 536,050 |
| | மீளளிக்கப்படாத வைப்புகள் | 940,000 | - |
| | நிலையான சொத்துக்களை விற்றொழித்தலிலான இலாபம் | - | 6,074 |
| | பிற்போடப்பட்ட வருமானம் | 22,222,444 | 11,227,928 |
| | போத்தல் வைப்புக்களைப் பதிவழித்தல் | - | 10,000 |
| | பரிமாற்ற அநுகூலங்கள் | 67,851,169 | 5,073,611 |
| | கால்நடை உணவு ஈட்டல்கள் | 546,425 | 336,186 |
| | பல்லின வருமானம் | 430,483 | - |
| | திரும்பவும் கிடைக்கின்ற காசோலைகளுக்கான மிகைவிதிப்பு | 974,464 | - |
| | வரி மிகையேற்பாட்டினை இலாபத்திற்கு மீள்நிலைப்படுத்துதல் | 161,291,918 | - |
| | | 353,057,479 | 174,764,543 |
| 5. | **பிற செலவினங்கள்** | | |
| | திரவப்பால் விற்பனை மீதான நட்டம் | 1,677,269 | 1,176,406 |
| | மாதிரி விவசாயப் பண்ணை தொழிற்பாட்டு நட்டம் | 0 | 172,497 |
| | பால் மாற்றுதல் மீதான நட்டம் | 11,235,041 | |
| | பால் மானியம் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் 5.1 | 54,864,721 | |
| | | 67,777,030 | 1,348,902 |

5.1. ஆண்டில் இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியிடமிருந்து ரூ. 393,116,484/- அளவில் கிடைக்கவேண்டிய கொடை பிற வருமானம் என்றவகையில் கம்பெனி ஏற்பிசைவு செய்துள்ளது. எவ்வாறாயினும் பின்னர் அறிக்கையிடல் திகதியில் மேற்படி வருமதியான மீள்அறவிடுவதிலான ஐயப்பாடு காரணமாக மில்கோ கம்பெனியின் செலுத்துதல் மானியத்திற்காக திறைசேரியிடமிருந்து கிடைக்கவேண்டிய கொடையில் ரூ. 447,981,206/- ஏற்பாடொன்றினை அறவிடமுடியாக் கடனுக்காக கமபெனி ஒதுக்கியுள்ளது. ஏனைய செலவுகளுக்காக மேற்டி ஏற்பாட்டின் நிகர தாக்கம் கீழே காட்டப்பட்டவாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

| | அளவு ரூ. |
|---|---|
| அரசாங்கக் கெடை - பிற தொழிற்பாட்டு வருமானம் 2014/11/01தொடக்கம் 2015/07/15 வரை பால் கொள்வனவு மானியம் (விலையேற்றம் ரூ. 50 தொடக்கம் 60 வரை) | 265,000,000 |
| 2015/07/16 தொடக்கம் 2015/11/30 வரை பால் கொள்வனவு மானியம் (விலையேற்றம் ரூ. 50தொடக்கம் | 128,116,484 |
| ஆண்டுக்குள் ஏற்பிசைவு செய்த வருமானம் | 393,116,484 |
| எஞ்சிய பால் மானியத்திற்காக ஆண்டில் வழங்கிய ஏற்பாடு மீள் அறவிடுவதிலான ஐயப்பாட்டினை பரிசீலனை செய்தல் | (393,116,484) |
| 2014/10/28 தொடக்கம் 2015/04/26 வரை உற்பத்தி விலைத் தாக்கம் பற்றிய பால் மானியத்திற்காக வழங்கிய ஏற்பாடு | (54,864,721) |
| மானியத்திற்காக ஆண்டுக்குள்ளே வழங்கிய மொத்த ஏற்பாடு | |
| | (447,981,205) |
| நிகர தாக்கம் - பிற செலவினங்கள் | (54,864,721) |

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| 6. | நிதி வருமானம் | | |
| | அழைப்பு/ நிலையான வைப்புகள் மீதான வட்டி - உள்நாட்டு | 40,738,354 | 34,463,538 |
| | நிலையான வைப்புகள் மீதான வட்டி - வெளிநாட்டு புழக்கத்திலுள்ள பணம் (அ. டொ.) | 25,938,787 | 23,003,709 |
| | பதவியணி கடன் மீதான வட்டி | 6,399,071 | 4,458,487 |
| | | 73,076,212 | 61,925,734 |
| 7. | **நிதிக் கிரயம்** | | |
| | நிதிக் குத்தகை மீதான வட்டி | 9,267,133 | 8,810,706 |
| | கடன் மீதான வட்டி | 54,401,805 | 47,444,964 |
| | கடப்பாடுகள் கட்டணம்' | 5,296,525 | - |
| | வங்கிமேலதிகப் பற்று மீதான வட்டி | 39,111,127 | 40,244,825 |
| | | 108,076,590 | 96,500,495 |

| | | 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது ரூ. | 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற 9 மாத கால எல்லைக்கானது ரூ. |
|---|---|---|---|
| 8. | வரிவிதிப்புக்கு முந்திய இலாபம் | | |

பின்வருவனவற்றை உள்ளிட்டதாக அனைத்துச் செலவுகளையும் அறவிட்ட பின்னர் வரிவிதிப்புக்கு முன்னரான இலாபம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

| | 2015 | 2014 |
|---|---|---|
| பணிப்பாளர்களுக்கான ஊதியங்கள் | 6,807,283 | 10,514,243 |
| கணக்காய்வுச் சேவைகள் | | |
| - உள்ளக கணக்காய்வுச் சேவைகள் | 1,454,847 | 972,463 |
| - வெளிவாரிக் கணக்காய்வுச் சேவைகள் | 603,750 | 603,750 |
| ஆதனம், சாதனம்,பொறித்தொகுதி மீதான மதிப்பிறக்கம்' | 260,027,049 | 150,184,230 |
| தே. க. வ.செலவினங்கள் | 154,785,579 | 114,849,792 |
| வர்த்தக விளம்பரங்களும் சந்தைப்படுத்தல் மேம்பாடும் | 44,522,488 | 51,211,849 |
| வெகுமதிகள் | - | 121,500 |
| சட்டக் கட்டணங்களும் தொழில்வாண்மைக் கட்டணங்களும் | 3,686,232 | 6,004,008 |
| சேத இழப்பீட்டுக்கான ஏற்பாடுகள் | 993,655 | 9,194,051 |
| திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 57,577,896 | 131,404,899 |
| பதவியணிக் கிரயம் | | |
| - சம்பளமும் வேதனமும் இணையான செலவுகளும் | 833,843,988 | 672,535,463 |
| - குறித்துரைத்த பங்களிப்புத் திட்டங்கயளின் கிரயம் - ஊசே.நி. மற்றும் ஊ.ந.நி. | 82,323,454 | 58,479,458 |
| - குறித்துரைத்த பங்களிப்புத் திட்டம் - பணிக்கொடை | 35,701,251 | 84,993,802 |

| 9. | வருமான வரிச்செலவுகள் | Note | | |
|---|---|---|---|---|
| | நடப்பு வருமான வரி ஏற்பாடுகள் | 9.1 | 15,932,842 | 8,473,947 |
| | ஆண்டுக்கான பிற்போடப்பட்ட வரிக் கட்டணம் | 21 | 4,535,056 | (2,272,730) |
| | | | 20,467,898 | 6,201,217 |

9.1

**நடப்பு வரி (வருமானம்) செலவுகள் இலாபம்/(நட்டம்) ஈட்டல்களுக்கிடையிலான இணக்கம்**

| | 2015 | 2014 |
|---|---|---|
| வரி விதிப்பிக்கு முந்திய கணக்கீட்டு இலாபம் | 3,817,741 | 248,159,134 |
| தனவேறாக கருதிய வருமானம் | (73,076,212) | (61,925,734) |
| வர்த்தக அல்லதுதொழில்முயற்சியில் இலாபம் | (69,258,471) | 186,233,400 |
| வரிப் பணிகளுக்கான நிகர இடமளிக்கதக்க இலாபம் | 267,241,697 | (94,787,007) |
| தொழில்முயற்சி (நட்டம்) /இலாபம் ஏற்புடையதாக்கிக் கொள்ளக்கூடிய வரிவிதிப்பு | 197,983,226 | 91,446,393 |
| வரி வீதம் | 10% | 10% |
| ஏனைய வருமானத்தை விடுவித்தல் | 25,938,787 | 23,003,709 |
| பொறுப்புக்கு கட்டுப்பட்ட பிற வருமானம் | 47,137,425 | 38,922,025 |
| வருமான வரிக்கு அறவிடக்கூடிய கணக்கீட்டு இலாபம்/நட்டம் | | - |
| வட்டி வீதம் | 10% | 28% |
| அறவிடக்கூடிய இலாபம் அல்லது வருமானம் மீதான வரி | 24,512,065 | 20,042,806 |
| 32 வது பிரிவின் கீழான கழித்தல் மீதான வரித் தாக்கம் | (8,579,223) | (11,568,859) |
| ஆண்டுக்கான ஏற்பாடு (10% இற்கு சீராக்கிய வருமானம் மீதான வரி ) | 15,932,842 | 8,473,947 |

9.2 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் (வெளிநாட்டு புழக்கத்திலுள்ள பணத்திலான நிலையான வைப்புகள் ) வருமான வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

10. சாதாரண பங்கொன்றுக்கான ஈட்டல்

